Registered as a Newspaper

பக்கங்கள் 6 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

Eelanaatham மக்கள் தினசரி Peoples Taily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 21 (04 5 94) புதன்கிழமை ஓசை 75

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு பழைய பாடசாலையில் நியமனம்

கடந்த நான்கு வருடங்களாக பயிலுநர் ஆசிரியர்களாக கடமை புரிந்து தராதரப் பத்திரமற்ற உதவி ஆசிரியர்களாக நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என கல்விச் சேவைச் சபையினால் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ள சாதாரண பயிலுநர் ஆசிரியர்களுக்கு இந் நிரந்தர நியமனம் அவர்களது தற்போதைய பாடசாலைகளில் தொடர்ந்து கடமையாற்றக் கூடியவாறு வழங்கப்படவேண்டும் என கல்விச் சேவைச் சபைச் செயலாளர் எஸ். வீரரத்ன சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களையும் கேட்டுள்ளார். இவர்கள் இடமாற்றம் பெற விரும்பின் அதற்குரிய இடமாற்றப் (6 ஆம் பக்கம் பார்க்க)

# தென்னாபிரிக்காவில் மலரும் கறுப்பர் ஆட்சி

# ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தேர்தலில் வெற்றி

## ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை வரும்

### நான்கு எதிர்க்கட்சிகள் முஸ்தீபு

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டுவர சுதந்திரக் கட்சி மற்றும் மூன்று எதிர்க்கட்சிகள் முன்னறிவித்தல் கொடுத்துள்ளன. நாளை வியாழக்கிழமையன்று இப்பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு கொண்டுவரப்படும் எனவும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்துவரும் நிலைப்பாடு, மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான நடவடிக்கை இன்மை போன்ற விடயங்கள் எதிர்க்கட்சிகளின் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## ஐ. தே. க. தவறிழைத்திருந்தால் என்னிடம் தெரிவியுங்கள்

### முஸ்லிம்களிடம் ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

முஸ்லிம் சமுதாயத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் ஏதாவது தவறுகள் நடைபெற்று இருந்தால் நேரடியாக தன்னிடம் தெரிவிக்குமாறு சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

சமஷ்தலங்கா முஸ்லிம் லீக் ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இக்கருத்தை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில் நாட்டின் அபிவிருத்திக்காக பேச்சுவார்த்தையையே தான் முழுமையாக நம்பி இருப்பதாகவும் எனவே முஸ்லிம் மக்களின் எண்ணங்களுக்கு மாறாக தனது செயல்பாடுகள் அமைந்திருந்தால் தன்னிடம் தெளிவாக தெரிவிக்கமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் [illegible] துடன் பேச்சுவார்த்தை நடத்துவதன்மூலமே தவறுகள் திருத்தப்படமுடியும் என்றும் எனவே முஸ்லிம் மக்கள் ஆளும் ஐ. தே. க. எதுவும் தவறுகளை உங்களுக்கு செய்திருந்தால் தன்னிடம் நேரடியாக தெரிவிக்குமாறு தெரிவித்துள்ளார்.

## நெல்சன் மண்டேலா ஜனாதிபதியாகின்றார்

## இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் வெற்றி

(ஜோகாணஸ்பேர்க்)

**இன ஒடுக்கு முறைக்குப் பெயர் பெற்ற தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களின் ஆட்சி மலர்கின்றது. இங்கு இடம் பெற்ற தேர்தலில் கறுப்பினத் தலைவரான நெல்சன் மண்டேலாவின் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் வெற்றி ஊர்ஜிதப்படுத்தப் பட்டுள்ளது. இதன் மூலம் திரு நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாக பதவி ஏற்கவுள்ளார். இதன் மூலம் தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் தங்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் வெற்றிவாகை சூடியுள்ளனர்**



சுதந்திரம் பிறந்தது

இரண்டு கோடியே முப்பது இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட வாக்குகள் எண்ணப்பட்டு விட்டதாகவும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் முன்னணியில் இருப்பதாகவும் ஒன்பது மாகாணங்களில் ஏழு மாகாணங்களில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்டுப்பாட்டை பெறும் நிலை காணப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிக்குமாறும், ஐந்து சத வீதத்திற்கு கூடுதலான வாக்குகளைப் பெற்ற சகல கட்சிகளும் தேசிய ஒற்றுமை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் என்றும் நெல்சன் மண்டேலா தெரிவித்தார்.

இதுவரை வெளியான முடிவுகளில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் 63 சதவிகித வாக்குகளும், அதிபர் எவ். டபிள்யூ டி. கிளார்க்கின் வெள்ளைநிற கட்சிக்கு 23 சதவிகித வாக்குகளும் கிடைக்கப்பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்காதா சுதந்திரக்கட்சி 7 வீத வாக்குகளையும் வெள்ளையர் சுதந்திர முன்னணி 2.9 வீத வாக்குகளையும் பெற்றுள்ளது.

## நெல்சன் மண்டேலா 10ஆம் திகதி பதவி ஏற்பார்

(ஜோகாணஸ்பேர்க்)

தென்ஆபிரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதியாக நெல்சன் மண்டேலா எதிர்வரும் பத்தாம் திகதியன்று பதவியேற்கவுள்ளார். [illegible] திற்கு அதிகமான வாக்குகளைப் பெற்ற அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய ஒற்றுமை அரசாக தமது அரசாங்கம் அமையும்

சமஷ்தலங்கா முஸ்லிம் லீக் ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு தனது செயல்பாடுகள் அமைந்திருந்தால் தன்னிடம் தெளிவாக தெரிவிக்கமுடியும் என செய்திருந்தால் தன்னிடம் நேரடியாக தெரிவிக்குமாறு தெரிவித்துள்ளார்.

# பிரச்சினைக்கு தீர்வுகாண சகலரும் வேறுபாடின்றி முன்வர வேண்டும்

டி. பி. விஜேதுங்கா

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு இன, மத, மொழி வேறுபாடு இன்றி அனைவரும் ஒன்றுபட்டு தீர்வுகாண முன்வரவேண்டும் என்றுசிறிலங்கா ஜனாதிபதி டி, பி, விஜேதுங்கா கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், நாம் இன்று வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டியவர்களாக உள்ளோம். நாட்டின் முக்கியமான இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதிலேயே தான் இலங்கையின் எதிர்காலம் தங்கியுள்ளது. பாராளுமன்றத்தின் சர்வகட்சி தெரிவுக்குழுவின் அறிக்கை எமது கைகளில் உள்ளது. சப்பந்தப்பட்ட சகல தரப்பினரதும் அபிலாசைகளுக்கு ஈடுசெய்யக்கூடிய தான சகல மார்க்கங்களையும் தேடுவதற்கு நாம் முற்பட வேண்டும். அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்னும் கடப்பாடு உண்டு. அதில் எந்தவித சந்தேகமும் தேவையில்லை ஜி. ஜி. பொன்னம்பலம், எஸ். ஜே. வி, செல்வநாயகம், அ அமிர்தலிங்கம் போன்ற தமிழ்த் தலைவர்களுடனும் நான் பழகி இருக்கிறேன். இலங்கையை சுதந்திர நாடாக கட்டி எழுப்புவதில் சிறுபான்மையினரின் பங்களிப்பை நான் பாராட்டுகிறேன், நான் சிறுபான்மை இனத்தவருக்கு எதிரானவன் எனக் காட்ட நன்கு திட்டமிடப்பட்ட முனைப்பான முயற்சி மேற்கொள்ளப்ட்டு வருகிறது,

அத்தகைய தவறான சக்திகளின் செயற்பாடுகளுக்கு வழி தவற வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு இலங்கையரும் இந்த நாட்டின் ஒரு தேசிய பிரஜையாவர். அவர்கள் அந்தஸ்தில் சமமானவர்கள். ஒருவருக்கு ஒருவர் குறைந்த அந்தஸ்து கொண்டவர்களல்ல என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மேதின அறிவிப்பை செயற்படுத்த ஜனாதிபதி விஜேதுங்கா பணிப்பு

(கொழும்பு)

மேதினத்தன்று அறிவிக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகளை உடன் செயற்படுத்துமாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்,

ஜனாதிபதியின் சார்பில் அவரது செயலாளர் கே. எச். ஜே. விஜேதாசா சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்களுக்கு விடுத்துள்ள அறிவுறுத்தலில் மக்கள் தமது வாழ்க்கைத் தரத்திலும், பொதுவான நல வாழ்விலும் உடனடியான பலனைப் பெறும் வகையில் இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும், இது சப்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி இரண்டு வார காலத்தில் அறிவிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது:

மாதாந்தம் 12,000 ரூபாவுக்கு குறைவாக சம்பளம் பெறும் தனியார்துறை ஊழியர்களுக்கு உழைக்கும்போதே வரி செலுத்தவேண்டும் என்பதிலிருந்து விலக்களித்தல், இதுவரை இது தொடர்பாக வசூலிக்கப்பட்ட பணம் திரும்பக் கொடுத்தல், 7.02 சத வட்டியில் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும். ஐந்து வருட சம்பள வீடமைப்புக் கடனை கூட்டுத்தாபன ஊழியருக்கும் விரிவுபடுத்தல், 12 லட்சம் பாடசாலை மாணருக்கு பகலுணவு முத்திரை வழங்கல், சனசவியத்திட்டம் ஆரம்பித்தல், ஊழியர் சேமலாப நிதிக்கான வட்டி விகிதத்தை அதிகரித்தல், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற 2500 மாணவருக்கு 10,000 ரூபா பரிசு வழங்கல், வேலையற்ற 8000 பட்டதாரிகளுக்கு வேலை வழங்கல், சிறு விவசாயிகளுக்கான உரமானியம் வழங்கல், தச்சுவேலை, மேசன் வேலை போன்ற முறைசாராதொழில்களில் ஈடுபட்டிருப்போருக்கு

[6ஆம் பக்கம் பார்க்க]

# சுதந்திரம் பிறந்தது மண்டேலா அறிவிப்பு

(ஜோகணஸ்பேர்க்)

தேர்தல் முடிவுகள் பெரும்பாலானவை வெளியிடப்பட்டிருக்கும் நிலையில் ''சுதந்திரம் பிறந்தது'' என்று தனது கைகளை அசைத்தவாறு நெல்சன் மண்டேலா தமது ஆதரவாளர்களிடையே கூறினார்.

தென்னாபிரிக்க வீதிகளில் பல்லாயிரக்கணக்கான கறுப்பின மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர் அங்கு வீதிகள் தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு இவ்வெற்றியைக் கொண்டாடி வருகின்றனர்.

இதேவேளை தென்னாபிரிக்க ஜனாதிபதி டி. கிளார்க் ''தென்னாபிரிக்கர்கள் அனைவரும் சுதந்திரமடைந்துள்ள இவ் வேளையில் அவர்கள் எல்லோருடைய நல்வாழ்த்துக்களையும் பிரார்த்தனைகளையும் ஏற்றுக் கொள்வதற்கு நெல்சன் மண்டேலா உரியவர்'' என்று கூறியுள்ளார்.

# உலகத் தலைவர்கள் மண்டேலாவிற்கு வாழ்த்து

(ஜோகாணஸ்பேர்க்)

தென் ஆபிரிக்காவின் முதலாவது பல்லின தேர்தலில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அதன் தலைவர் நெல்சன் மண்டேலாவிற்கு உலகின் பல பாகங்களில் இருந்தும் தலைவர்கள் வாழ்த்தும் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் தமது செய்தியில் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் மாபெரும் வெற்றி ஊக்குவிப்பதாக இருப்பதாக தெரிவித்துள்ளார்

பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயர் தொலைபேசி மூலம் நெல்சன் மண்டேலாவிற்கு தெரிவித்த செய்தியில் சமாதானத்திற்கான நெல்சன் மண்டேலாவின் திட்டங்களுக்கு பாராட்டு தெரிவித்தார்

# இன்று படகுச்சேவை

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர்.

யாக நெல்சன் மண்டேலா எதிர்வரும் பத்தாம் திகதியன்று பதவியேற்கவுள்ளார். அண்மையில் நடைபெற்ற தேர்தல்களில் ஐந்து சதவீதத் தேசிய ஒற்றுமை அரசாக தமது அரசாங்கம் அமையும் என்று நெல்சன் மண்டேலா கூறியுள்ளார்.

# உதவி ஜனாதிபதியாக கிளார்க் நியமிக்கப்படுவார்

(ஜோகாணஸ்பேர்க்)

தென் ஆபிரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக நெல்சன் மண்டேலா பதவியேற்றதும் உதவி ஜனாதிபதியாக முன்னாள் அதிபர் எவ். டபிள்யூ டி. கிளார்க் நியமனம் பெறுவார் என்றும் அவரது கட்சியைச் சேர்ந்த ஐவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்றும் மேலும் கூறப்படுகின்றது.

# 'விடுதலைப் புலிகள்' ஏடு நாளை வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழின் சித்திரை மாத ஏடு நாளை வெளிவருகின்றது

''சிங்கள அரசு பெரும் போருக்குத் தயாராகின்றது'' என்ற தலைப்புச் செய்தியுடன் வெளிவரும் இவ் இதழில்

(6ஆம் பக்கம் பார்க்க]

# ஐ. தே. கட்சியினுள் களை எடுப்பு அமைச்சர் பலர் வெளியேற்றப்படுவர்?

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய தேசிய கட்சியில் எந்த வேளையிலும்பாரிய பிளவு ஏற்படும் நிலை தோன்றியுள்ளதாகவும் இதில் யார் கட்சியை விட்டு வெளியேறுவார்கள். யார் வெளியேற்றப்படுவார்கள்? என்பது குறித்து திட்டவட்டமாக தெரிவிக்க முடியாமல் இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது ஐ தே க. பொதுச் செயலாளர் பதவியில் இருந்து விலகிய அமைச்சர் சிறிசேன கூரே தொடர்ந்து அமைச்சராக இருப்பாரா? அல்லது புதிய கட்சியொன்றை வேறு பல விரக்தியுற்ற ஐ. தே. க. உறுப்பினர்களுடன் சேர்ந்து ஆரம்பித்து பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைவாரா? என்பது கூட தற்போது ஒரு கேள்வியாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காமினி திசநாயக்காவை ஐ தே. கவுக்கு கொண்டு வருவதை தொடர்ந்தும்சிலஅமைச்சர்கள்எதிர்த்து வருவதாகவும் தற்போது இது தொடர்பாக கட்சியில் இழுபறிநிலை தோன்றியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா டி, பி. விஜேதுங்கா ஆகியோருடன் பல அமைச்சர்கள் சென்று இது தொடர்பாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் எந்த அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெறுகின்றன என்பது குறித்து எதுவும் தெரிவிக்க சம்பந்தப்பட்டோர் மறுத்து விட்டனர்

இதேவேளை கட்சி[illegible]ன் புதிய பொதுச் செயல[illegible]கத் தெரிவு செய்யப்பட்ட டாக்டர் காமினி விஜேசேகரா நியமனத்திற்கு கட்சியில் சில உறுப்பினர்கள்எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகவும் இவர் கட்சியை விட்டு விலகி மீண்டும் கட்சியில் உட்பிரவேசித்தவர் என்றும் எனவே இவருக்கு இப்பதவி வழங்கக்கூடாது என வடமேல் மாகாணசபை ஆளுநர் கருணாசேன கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்'

வென்னப்புவவில் சென்ற மாத நடுப்பகுதியில் நடைபெற்ற இரகசிய பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் தனக்கு இப்பதவி தரப்படுவதாக

[6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


### கோழி பராமரிப்பவர் தேவை

எமது கோழிப்பண்ணையில் கோழி பராமரிப்பதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும் கீழ் காணும் முகவரிக்கு 5-5-94 காலை 10 மணிக்கு நேரில் வரவும். அந்திவானம் பதிப்பகம் நாவலர் வீதி நாவாந்துறை யாழ்ப்பாணம். (8182)

### பாம்போஷா

குடும்பத்திலுள்ள சகலருக்கும் ஏற்ற தரமானசத்துணவு-பாம்போஷா ப-அ சபையின் கற்பகம் விற்பனை நிலையங்களில் விற்பனையாகின்றது- (சி-9332)

### மில்க்வைற் சலவைத்தூள்

சலவைக்கு மில்க்வைற் சலவைத்தூள்- அழுக்கை அகற்றுவதில் துரிதம், - பளிச்சிடும் வெண்மை தரும் நீலம் கலந்தது சிக்கனமானது பக்கற் ரூபா 6/- மொத்தக் கொள்வனவிற்கு கவர்ச்சியான கழிவு 25 வெற்றுப் பக்கற்றுக்கு ஓர் அப்பியாசக் கொப்பி, 100 வெற்றுப் பக்கற்றுக்கு அழகிய லேஞ்சி வழங்கடபடும், ''மில்க்வைற்'' (சி-9330)

### தவறிவிட்டது

30-04-94 அன்று பரமேஸ்வரச் சந்திக்கும், கந்தர் மடச் சந்திக்குமிடையில் டயறியுடன் நாகராசா மோகனகரன், குலராசா சற்குணதேவி ஆகிய இருவரின் அடையாள அட்டையும், போக்குவரத்து அனுமதி அட்டையும் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது டயறியிலுள்ள முகவரியில் ஒப்படைக்கவும். (8190)

### தவறிவிட்டது

2-5-94 பிற்பகல் 6 மணியளவில் திருநெல்வேலி நேசிங்ஹோமுக்கும்முடமாவடிச்சந்திக்கும்இடையில் எனது 2பவுண் நிறையுடைய பென்ரன்உள்ள தங்கச்சங்கிலி தவறியுள்ளது. கண்டெடுத்தவர்கள தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு தயவுடன் வேண்டுகின்றோம் அதைக் கண்டு எடுத்து ஒப்ப


# 55 நாடுகள் சுதந்திரத்தை இழந்திருக்கின்றன

1992 இல் சுதந்திர தேர்தல், அரசியல் அச்சுறுத்தல், தகாத அரசியல் தலையீடு ஆகியவற்றினால் 38 நாடுகள் சுதந்திரத்தை இழந்துள்ளன. இவ் வருடம் இந் நாடுகளின் தொகை 55 ஆக அதிகரித்துள்ளது என நியூயோர்க்கில் தலைமையகத்தைக் கொண்ட மனித உரிமை கண்காணிப்பு அமைப்பான பிரீடம் ஹவுஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. கடந்த வருடத்தில் மட்டும் 50 கோடி மக்கள் தமது சுதந்திரத்தை இழந்தனர்.

மொஸ்கோவில் 1991 ஆகஸ்டில் பழைய காவலரின் சதி முயற்சியிலிருந்து ரஷ்ய பாராளுமன்றத்தைகாப்பாற்றபெருமையுடன் போராடிய ஜனநாயக ஆர்ப்பாட்டக்காரர்கள் சுதந்திரமாக தெரிவு செய்யப்பட்ட பாசிசவாதிகளினதும் முன்னைய கம்யூனிஸ்ட்களினதும் ஆதிக்கத்திலிருந்த பாராளுமன்றத்தினால் வெளியேற்றப்பட்டனர்.

உள்ளூர் சந்தர்ப்ப சூழ்நிலை நாட்டுககு நாடு வித்தியாசப்படுகின்றது, ஆனால் பொதுவான பாணி சோவியத் யூனியனால் சுருக்கமாக எடுத்துக் கூறப்பட்டது போன்று ஒரே தன்மையுடையதே அதாவது பழைய அமைப்பு முறையின் துரித வீழ்ச்சியும் அதனையடுத்து பொருளாதார விரயமும் அரசியல் அதிகார பீடத்தின் சிதறலும் சமூக அமைதியின்மை, வறுமை ஆகியவற்றின் அபரிமிதமும்தோன்றின

கிழக்கு நாடுகளின் கடினமான மண்ணில் வரலாற்று வேர்கள் ஆழப்பதியாத நிலையில் செழிப்பு இன்மையால் ஜனநாயக மலரின் வளர்ச்சியும் தடைப்பட்டுள்ளது. நிறுவனங்கள், பெறுமதிகள், நடைமுறைகள் ஆகியன ஒன்று சேர்ந்து சுய ஆளுகைக்கு தகுந்த சிவில் சமுதாயம் ஒன்றை உருவாக்கின்றன.

பல தசாப்தங்கள் நூற்றாண்டுகளாக கஷ்டமான அனுபவத்தின் மூலம் கிடைககப் பெற்ற இந்த இயல்புக் குணங்கள் இன்று நீண்ட காலமாக அனுபவிக்கப்பட்டு வந்த அரசியல் கலாசாரங்களிலும் கூட அறைகூவலுக்கு ஆளாகின்றன

உண்மையில் 1989 புரட்சிகளால் விடுதலை பெற்ற சிலசக்திகள் தற்போது தங்களுக்கு விடுதலைதேடித்தந்தவர்களையே பழிவாங்குகின்றன. மேற்குலக அரசியல்வாதிகளோ நலிந்து போன ஜனநாயகத்தை ஆதரித்து வளர்க்க தமது கூட்டுப் பொறுப்புணர்வை பயன்படுத்தாமல் அசட்டையம் செய்து வருகின்றனர்.

கிழக்கு நாடுகளில் கோபர்சேவ், ஹவேல், வலேஸா உட்பட தனித்துவமான தலைமைத்துவத்தின் ஒரு சந்ததியும் கொள்கை வாதிகளான பிரிவினைவாதிகளின் பரம்பரையும் மேற்கில் ஏதுமறியாத பிடிவாதப் போக்குள்ள கற்பனை வளமற்ற தலைவர்கள் ஒருவருக்கு ஒருவர் பொருத்தமற்றவர்களாக காணப்பட்டனர்.

ரஷ்யர்களும் கிழக்கு ஐரோப்பியர்களும் தமது உயிரை துச்சமாக மதித்து வாழ்க்கை தரத்தை துறந்து பல நூற்றாண்டு கால ஒடுக்கு முறையின் போது பெறப்பட்ட புராதன கால பொறுமையுடன் பொருளுதவி தருவதென்ற அமெரிக்காவினதும், மேற்கு ஐரோப்பாவினதும் பெருந்தன்மையான வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்வரை காத்திருக்கிறார்கள். ஆனால் இவர்கள் கண்டிப்பான சுதந்திர சந்தைக் கோட்பாடுகளுடன் தங்கள் கடப்பாடுகளை நிறைவேற்ற வழிவகைகளைத்தேடி ஏமாற்றமே அடைந்தனர்.

முன்னைய சோவியத் ஏகாதிபத்தியத்திலும் ஏனைய இடங்களிலும் இத்தகைய சமூக இடர்பாடுகளையும் அரசியல் குழப்பநிலையையும் கண்டிக்கும் உலக பொருளாதார சக்திகள் உலக சமூகத்திலிருந்து முற்றாக விடுபடவும் தமது சொந்த எதிர்ப்பு அணியை திரும்பவும் ஸ்தாபிக்க முடியாத நிலையில் உள்ளன

விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உலகம் இப்போது உற்பத்திகள் சேவைகள் யோசனைகள் ஆகியவற்றைக் கொண்ட தனிச்சந்தையாக விளங்குகின்றது இதுவா அதுவா என்ற தேர்வுக்கு இடம் கிடையாது.

இருந்தும் வரலாற்றின் ஆச்சரியகரமான செயற்பாட்டில் இந்த அச்சுறுத்தல் ஒரு வகையான முன்னேற்றத்தையே பிரதிபலிக்கும். முடிவில் விடுதலை உரிமைகளை உள்ளடக்கி இருக்கும் பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் எப்படி வாழ்வது என்ற சிறந்த கருத்தை நாம் அனைவருமே பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கை உண்டு.

\- ஐ பி எஸ்

### கண்டெடுப்பு

4 6 1 3 6 3 5 6 3V இலக்க அடையாள அட்டையும் பேர்சும் பி. தர்மலிங்கம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### ஒளிவசதி

(கொழுபுத்துறை)

நல்லூர் முருகன் சன சமூக நிலையத்தினர் தனது எல்லைக்கு உட்பட்ட மாணவர்கள் சனசமூக நிலையத்துக்கு வந்து இரவில் இலவச கல்வி கற்பதற்கான பெற்றோமாக்ஸ் வசதிகளைச் செய்து கொடுத்துள்ளனர்

இச் சனசமூக நிலையத்தினரின் இச் சேவையை இப்பகுதி மக்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளனர். (24)

மீன்பிடி கட்டுமரம் தயாரிக்க

# அல்வீசியா மரங்களை பெற அரச அதிபர் நடவடிக்கை

(நமது நிருபர்)

மீன்பிடிக்குத் தேவையான கட்டு மரங்களை தயாரிப்பதற்கு பாவிக்கப்படும் 'அல்வீசியா' மரத்தினை தென்பகுதியிலிருந்து பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் யாழ் அரசாங்க அதிபர் ஈடுபட்டுள்ளார்.

இம் மரங்களை இங்கு கொண்டு வருவதற்கு இராணுவத்தினர் தடைவிதித்திருப்பது தெரிந்ததே.

தற்போது தேவையான மரத்தின் அளவினை கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் தனக்கு தரும்பட்சத்தில் இதனை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்குத் தேவையான அனுமதியினை பெற்றுக் கொடுக்க முடியும் என அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

எனினும் இவற்றை இங்கு கொண்டு வருவதற்குரிய சகல ஒழுங்குகளையும் கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தரோ அல்லது இணையமோ மேற் கொள்ள வேண்டும் எனவும் அரச அதிபர் அண்மையில் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட கடல்வள அபிவிருத்தி கூட்டத்தில் தெரிவித்தார். (ச,சி)

# சீநோர் நிறுவனத்தை மீண்டும் இயக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

குருநகர் சீநோர் நிறுவனத்தை குத்தகைக்கு விடுவதென சிறிலங்கா அரசு தீர்மானித்துள்ளதாக கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில வருடங்களாக இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இந் நிறுவனம் மூடப்பட்டு கிடப்பது தெரிந்ததே

இதனைக் குத்தகைக்குப் பெற்று மீள இயங்க வைக்கும் முயற்சியில் யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் நிறுவன ஒன்று ஈடுபட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இந் நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்டுவந்த இயந்திரம் நல்லநிலையில் இருப்பதாகவும் பெருமளவு மூலப்பொருள்கள் சேதமுறாதிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந் நிறுவனத்தை மீள இயங்கச் செய்வதன் மூலம் யாழ்மாவட்ட மீனவர்களுக்கு தேவையான மீன்பிடி வலைகளில் கணிசமான அளவினை உற்பத்தி செய்து கொள்ளலாம் என தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச,சி)

காலம் தாழ்த்தி விண்ணப்பித்தோருக்கு

# நேர்முகப் பரீட்சை நடத்த மாகாணசபை முயற்சி

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி பயிலுநருக்கான விண்ணப்பங்களில் மிகவும் காலம்தாழ்த்தி அனுப்பியவர்களுடைய விண்ணப்பங்கள் நேர்முகப் பரீட்சைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என மாகாணசபை செயலாளர் அரச அதிபருக்கு அறிவித்துள்ளார்

இருந்தும் அவ்வாறு விண்ணப்பித்தவர்களது விண்ணப்பங்களை ஏற்று நேர்முகப் பரீட்சைக்கு அவர்களையும் சேர்த்துக் கொள்ள வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் அவர் அரச அதிபருக்கு மேலும் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி தெரியவருவதாவது பட்டதாரி பயிலுநருக்கான விண்ணப்பங்கள் அனுப்பியும் தமக்கு நேர்முகப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கவில்லை என அரச அதிபருக்கு சிலர் புகார் செய்ததை அடுத்து அரச அதிபர் மாகாண சபையுடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே மிகவும் காலந்தாழ்த்தி தமக்கு கிடைத்த விண்ணப்பங்களே நேர்முகப் பரீட்சைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என அவர் அரச அதிபருக்கு அறிவித்துள்ளார். (சி)

### குருபூசை

(கொழுபுத்துறை)

நல்லைலதிருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இன்று புதன்கிழமை மாலை 5 00 மணிக்கு திருநாவுக்கரசு நாயனார் குருபூசை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் சிறப்பாக இடம் பெறும். (24)

கடற்றொழில் திணைக்களத்திற்கு

# இராணுவ நடவடிக்கையால் மூன்று கோடி ரூபா நட்டம்

(யாழ்ப்பாணம்)

கடந்த கால சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் கடற் தொழில் திணைக்கள சார்புடைய கட்டடங்களுக்கு மூன்று கோடி ரூபா வரை நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா விமானப் படை கடற்படை மற்றும் இராணுவத்தினராலும் இந்திய அமைதிப் படையினராலும் கடந்தகாலங்களில் யாழ். மாவட்டத்தில் பெருமளவு கோடி பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டது தெரிந்ததே.

இவர்களின் தாக்குதல்களால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் தவிர்ந்த யாழ் மாவட்டத்தில் மட்டும் கடற் தொழில் திணைக்களம் மற்றும் அதனுடன் தொடர்புடைய கட்டடங்கள் மற்றும் தளபாடங்களுக்கு ஏற்பட்ட சேதங்களின் பெறுமதி 2 கோடியே 84 லட்சத்து 43 ஆயிரத்து 300 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (ச,சி)

வடமராட்சியில் மீண்டும்

# போஸ்டோஸ்ரர் சேவை

# பயன்படுத்தமுடியாத வலை


## நினைவு கூருகின்றோம்..

**04.05.1994**

1987-ம் ஆண்டு இ[illegible]நினத்தில் மட்டு வந்தாறு மூலைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

லெப். டயான் (சின்னத்துரை தேவலிங்கம்-ஆரையம் பதி - மட்டு)

செய்து ஈழநாதம் காரியால யத்தில் ஒப்படைக்குமாறு தய வுடன் வேண்டுகின்றோம் அதைக் கண்டு எடுத்து ஒப்ப டைத்தவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்
[8187]


### விற்பனைக்கு மீன்தூள்

எமது சங்கத்தில் மீன்தூள் விற்பனைக்குண்டு. தேவைப் படுவோர் தங்கள் கூறு விலையை 10-05 94க்கு முன் சமர்ப்பிக்கவும். பொதுமுகா மையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங் கம், கலாசாலை வீதி, திரு நெல்வேலி கிழக்கு, கோப் பாய் [சி 9339]

### எரு

எமது சங்கத்தில் எரு விற் பனைக்குண்டு. வாங்க விரும்பு வோர் அலுவலக நேரத்தில் பார்வையிட்டு கூறுவிலையை 10-05-94க்கு முன் சமர்ப்பிக் கவும், பொதுமுகாமையாளர் யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலா சாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
(சி-9340)


## இன்றைய நிகழ்வு

(...காமம் புத்துறை)

யாழ் அரியாலை நீர் நொச்சித்தாழ்வு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் கோவி லில் இன்று புதன்கிழமை காலை 7.00 மணிக்கு 108 விசேட கலச சங்காபிஷே கமும், உலக மக்கள் யாவ ரும் மனநிம்மதி, சமாதானம், சுபீட்சம், நன்மைபெற இறை ஆசி வேண்டிக்கணபதிஹோம மும் நடைபெறவுள்ளன.

இரவு 6.30 மணிக்கு ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் வெளி வீதி உலா வந்து அடியார் களுக்கு அருள் பாலிக்கவுள் ளார்,


## போட்டோஸ்ரர் சேவை

### கனன் போட்டோஸ்ரர் சேர்விஸ்

பருத்தித்துறை

(இலங்கை வங்கிக்கு அருகாமையில்) (-8192)

## மென்பான விற்பனையாளருக்கு ஒரு நற்செய்தி!!

தற்போது பின்வரும் இடங்களில் TASTY மென்பா னங்களை நீங்கள் மொத்தமாகக் கொள்வனவு செய் யலாம்.

1. மாருதி ஸ்ரோஸ், கே. கே. எஸ் றோட், வல்வெட்டித் துறை.
2. வேலவன் ஸ்ரோஸ், பருத்தித்துறை.
3. சாயி கிருஷ்ணா, வதிரிச்சந்தி நெல்லியடி.
4. முருகன் ஸ்ரோஸ், சிறுப்பிட்டி
5. அறிவகம், சாவகச்சேரி
6. சாந்தி ஸ்ரோஸ், கண்டி வீதி பளை

(சி-9341)


## நன்றி நவிலல்

அரசினர் பொறுப்பேற்ற தோட்டப்பாடசாலை களில், 10 வருடங்களிற்கு மேல் சேவை ஆற்றிய 45 வயதிற்கு மேற்பட்ட ஆசிரியர்களினது ஓய்வூதியம் சில வருடமாக மறுக்கப்பட்டிருந்தது. இவ்விட யத்தை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுக்காரியதரிசி திரு த. மகாசிவத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்ததன் பயனாக, அவரின் தொடர்ச்சியான முயற்சியினால் ஓய்வூதியம் எமக் குக் கிடைத்துள்ளதனால் அவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

திருமதி ஜ - தங்கத்துரை
சங்கரத்தை
வட்டுக்கோட்டை

(8189)

# பயன்படுத்தமுடியாத வலை மீனவர்களுக்கு விநியோகம்

(நமது நிருபர்)

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று மீன வர்களுக்கென வழங்கிய வலைகளில் சில குடாநாட் டில் மீன்பிடித் தொழிலுக்கே பயன்படுத்தமுடியாதவை என சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

மேற்படி நிறுவனம் தொழில் களை இழந்துள்ள மீனவர் கள் மீண்டும் தொழில்களை ஆரம்பிப்பதற்கென மீன்பிடி வலைகளை கொழும்பிலிரு ந்து பெற்று விநியோகித்து வந்தது இவை சீரானமுறையில் மீனவர்களுக்கு விநியோகிக்கப் படவில்லை என அண்மையில் யாழ் செயலகத்தில் யாழ் அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற கடல்வள அபி விருத்திக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

யாழ். மாவட்டத்தின் பிர தேச செயலர்கள், கடல் தொழில் பரிசோதகர், உட் பட 37 உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட இக் கூட் டத்தில் மேற்படி நிறுவனம் கடற்தொழிலில் ஈடுபடாத வர்கள், கடற்தொழில் தெரி யாதவர்களுக்கும் மேற்படி வலைகள் வழங்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடற்தொழில் சங்கங்கள் மற் றும் கடற்தொழில் விரிவாக்க உத்தியோகத்தர் ஊடாக தகவல்களைத் திரட்டி இத் தகைய உதவிகளை வழங்கு வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

(ச, சி)


## ஏப்ரல் மாத சீட்டிழுப்பில் பரிசு பெறுவோர் விபரம்

| | | |
|---|---|---|
| 1-ம் பரிசு | 5141 | வைத்தியக் கலாநிதி உமாகாந்தன் வைத்தியசாலை, நாயன்மார்கட்டு |
| 2-ம் பரிசு | 5285 | திரு. க. றொபேட் யாழ். பல்கலைக் கழகம் திருநெல்வேலி, |
| 3-ம் பரிசு | 5256 | செல்வி சுகந்தா பருத்தித்துறை |

நீங்களும் அதிர்ஷ்டசாலிகளாக மாற எம்மிடம் கொள்வனவு செய்யுங்கள்

### "எழிலகம்"

லெப்டினன்ட் இளங்கோ தெரு,
யாழ்ப்பாணம்.
(சி-9342)


**லெப். டயான்** (சின்னத்துரை தேவலிங்கம்-ஆரையம் பதி - மட்டு)

**காமினி** (காமினி பேபியன் அனஸ்டீன் - 63ம் புதுவீதி, கொய்யாத்தோட்டம் - யாழ்)

1988-ம் ஆண்டு ஆலையடிவேம்பில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட சமரில் சயனைட் உட்கொண்டு வீரச் சாவெய்திய,

**லெப். மைக்கல்** (போசப்பிள்ளை தியாகராசா - அக்கரைப்பற்று - 03 அம்பாறை)

இதே சமரின்போது வீரச்சாவெய்திய,

**லெப். சுரேஸ்** (குழந்தைவேல் தவராசா - அக்கரைப்பற்று - 03 அம்பாறை)

திராய்க்கேணிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது சயனைட் உட் கொண்டு வீரச்சாவெய்திய,

**2-ம் லெப் சரத்** (மார்க்கண்டு கண்ணதாசன் - காரைதீவு - 01, அம்பாறை)

1990-ம் ஆண்டு அம்பாறை - கல்முனை இறக்கா மம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப் பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த,

**அலெக்ஸ்** (அகமட்றியாஸ் - முஸ்லீம் வீதி, மருத முனை - நீலாவணை)

1991-ம்ஆண்டு பருத்தித்துறைப் பகுதியை அண்டிய தமிழீழக்கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படைக்கப்பல் மீதான கரும்புலித்தாக்குதலை மேற்கொண்டு வீரச் சாவெய்திய,

**கடற்கரும்புலி கப்டன் ஜெயந்தன்** (சம்புக்குட்டி பத்மநாதன் மாரியம்மன் கோவிலடி - மட்டு)

**கடற்கரும்புலி கப்டன் சிதம்பரம்** (பெரியதம்பி சந்திரன் - வல்வெட்டித்துறை - யாழ்)

1992-ம் ஆண்டு மட்டு - இருதயபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது ஏற்பட்ட சமரில் சயனைட் உட் கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப். பிரபாகரன்** (தம்பிப்பிள்ளை பிரபாகரன் சத்துருக்கொண்டான் - மட்டு)

1993-ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த,

**2-ம் லெப் அருள்மதனி** (ரத்தினேஸ்வரி தச் சனாமூர்த்தி - வடலியடைப்பு - பண்டத்தரிப்பு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9335)

Branch Library



# ஈழத்தமிழரின் சுதந்திரம் குறித்து இந்திய கொள்கைமாற்றம் தேவை

## 'ஐலண்டில்' தராகி விமர்சனம்

(கொழும்பு)

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் சூத்திரதாரியான முன்னாள் இந்தியத் தூதுவர் ஜே.என் டிக்ஸிற்றின்சிந்தனையும் அச்சுறுத்தும் போக்கும் 8000 இலங்கைத் தமிழர்கள், 1000 இந்தியப் படையினர் ஆகியோரின் உயிரிழப்புகளுடனும் அவமானத்துடனும் இந்தியா இலங்கையை விட்டு வெளியேறும் நிலையைதோற்றுவித்தது. ஈழத் தமிழர்களின் அரசியல் தேவையையும் விடுதலைப் புலிகளையும் அலட்சியம் செய்தமையுமே இந்திய அரசினதும் அதன் இராணுவத்திற்கும் ஏற்பட்ட தோல்விக்கு காரணமாகும். இவ்வாறு சண்டே ஐலண்ட் பத்திரிகையில் தராகி எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்

அதில் மேலும், பிரபாகரனைத் தலைவராகக்கொண்ட ஈழத்தமிழர்கள் தமது அரசியல் போராட்ட நிலையில் உறுதியாக உள்ளனர் என டிக்ஸிற் இந்து பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். புதிய கோணத்தில் அவரின் இக்கருத்து சிந்திக்கப்பட வேண்டியதெனினும் இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கு உட்பட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்ற கூற்று யதார்த்தத்திற்கு ஒவ்வாதது ஈழத் தமிழர்களுக்கு தனியாட்சி கிடைக்கும் பட்சத்தில் அது இந்தியாவின் ஒருமைப்பட்டிற்கும் அபிலாசைக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் என்ற பயஉணர்வை இந்திய கொள்கை வகுப்பாளர்களின் சிந்தனையில் திணிக்கப்பட்டுள்ளது இது மிகவும் பரிகாசத்திற்குரியது.

பங்களாதேஷ் பாகிஸ்தானிலிருந்து பிரியுமானால் அது இந்தியாவுடன் இணைந்துவிடும் என அப்போது பேசப்பட்டது. ஆனால் அப்படி நடக்கவில்லை. ஈழத்தமிழர்கள் பங்களாதேஷியர்கள் போல் தம்மினத்தையும் தமது பாரம்பரிய பிரதேசத்தையும் பாதுகாத்து சுதந்திரமாக வாழவே போராடுகின்றனர் என்ற உண்மையை இந்தியா உணர வேண்டும். இந்திய அரசு ஈழத்தமிழரின் சுதந்திர வேட்கைக்கு மதிப்பளித்து தமது கொள்கைகளை அவர்களுக்கு உதவும் வகையில் மாற்றிக்கொள்வது அறிவுடையதாகும்எனபிரான்சில்இருந்து வெளியாகும் எரிமலைசஞ்சிகையைமேற்கோள் காட்டி தராகி தனது விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# கூரேயின் இராஜினாமா பின்னணியில் ஜே.ஆர்.

(கொழும்பு)

சிறிசேன கூரேயின் பதவி இராஜினாமாவின் பின்னணியில் செயல்பட்டவர் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கட்சி மாநாட்டில் பிரதமர் டி.எஸ் சேனநாயக்காவிற்கு பின்னர் ஐ.தே.கவை பலம் வாய்ந்த சக்தியாக மாற்றியவர் பிரேமதாசாவே என அங்கு பேசிய ஒஸி அபயகுணசேகர தெரிவித்தார். இம்மாநாட்டிற்கு சிறிசேன கூரே தலைமை வகித்திருந்தார்.

கூரேயின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஐ தே.கவின் வளர்ச்சியில் தமது பங்கை வெளியிடாததினால் ஆத்திரம் கொண்ட ஜே. ஆர் ஜெயவர்த்தனா கூரேக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தீவிரமாக செயற்பட்டதாக தெரியவருகிறது. இது குறித்து பிரதமர் ரணிலை சந்தித்த ஜே. ஆர் கூரேயின் தலைமையிலான இம்மாநாட்டில் கூறப்பட்ட தகவல்களை தெரிவித்து தமது கண்டனத்தை வெளியிட்டார். ஒஸியினால் வெளியிடப்பட்ட இக்கூற்று ஐ.தே க உயர் தலைவர்களை அவமானப்படுத்துவதாக அமைந்துள்ளது. இது தம்மை மட்டும் அல்ல தற்போதைய ஜனாதிபதி விஜேதுங்காவையும் அவமானப்படுத்துவதாக உள்ளது என ஜே ஆர் எடுத்துக் கூறினார்.

இதைத்தொடர்ந்து ஜனாதிபதி விஜேதுங்கா, பிரதமர் ரணில் மற்றும் சில ஐ.தே.க தலைவர்களுடனான சந்திப்பில் கூரேயின் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் கூறப்பட்ட கருத்துகள் ஐ தே கவை பிளவுபடுத்தும் போக்கிலானது என ஜே. ஆர் ஜெயவர்த்தனா குறிப்பிட்டதாகவும் தெரியவருகின்றது.

# தகாத தொடர்பிற்காக இருவர்மீது வழக்கு தாக்கு

(தென்மராட்சி)

கொடிகாமத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தகப்பன் ஒருவர் அதேயிடத்தைச் சேர்ந்த திருமணமாகி கணவனைப்பிரிந்து வாழும் ஒரு பிள்ளையின் தாயோடு தொடர்பு கொண்டிருந்தமைக்காக சாவகச்சேரி நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது

மேற்படி நபரின் மனைவியின் முறைப்பாட்டின்படி மன்று விசாரணையை மேற்கொண்ட போது அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதனையடுத்து குற்றவாளிக்கு 7500 ரூபா குற்றப் பணம் கட்டும் படியும் தவறினால் 300 நாள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது தொடர்ந்தும் மேற்படி பெண்ணுடன் தொடர்பு கொள்ளக் கூடாதென எச்சரிக்கப்பட்டார்.

இதே வேளை திருமணமாகி 3 பிள்ளைகளின் தகப்பன் என தெரிந்து கொண்டு இவருடன் தொடர்பு வைத்ததிற்காக அப் பெண்ணுக்கு மன்று 24 மாதத்திற்குள் 3 மாத கால ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை வழங்குவதுடன் இதுசம்பந்தமான தொடர்பு இனி இருக்கக் கூடாது என எச்சரிக்கப்பட்டது' (86)

# பாம்பு தீண்டி இறப்போரில் இலங்கையும் முன்னணியில்

(கொழும்பு)

உலகில் பாம்பு தீண்டி மரணமாவோர் விகிதத்தில் இலங்கையும் முன்னணியில் இருப்பதாக இலங்கை வைத்திய சங்கம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கின்றது.

இலங்கையில் 93 வகைப் பாம்புகள் உண்டு இவை நிலம், சுத்தமான நீர், கடல் நீர் என்பவற்றில் வாழுகின்றன இப்பாம்புகளில் பெரும்பான்மையானவை தீங்கு விளைவிக்காதவை என கணிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக இங்குள்ள பாம்புகளில் ஐந்து இனங்களே அதிகவிஷமுடையனவென்றும் அதிலும் நான்கு இனப்பாம்புகளே அதிக தீங்கு விளைவிக்கக் கூடியவையெனவும் கண்டறியப்பட்டுள்ளது.

இப்பாம்புகள் நிலத்திலேயே வாழுகின்றன, கண்ணாடிப்புடையன், நாக பாம்பு, எண்ணெய் விரியன், எட்டடிவிரியன் ஆகிய நான்குமே அதிக விஷமுடைய பாம்பு இனங்களாகும்.

பாம்புக்கடிக்கு இலக்கான ஒருவரை உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதன் மூலம் உயிராபத்தை தவிர்த்துக்கொள்ளலாமெனவும், இயலுமான வரை கடித்த பாம்பையும் மருத்துவமனைக்கு கொண்டு செல்வதன் மூலம் பாம்பின் இனத்தை அறிந்து அதற்கேற்ற வகையில் சிகிச்சை அளிக்க உதவியாக இருக்குமெனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ. தே. க. - மக்கள் கட்சி உறவு விரைவில் முறிவடையலாம்

(கொழும்பு)

மக்கள் கட்சி - ஐக்கிய தேசிய கட்சி உறவில் விரிசல் ஏற்படலாம் என ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

கொழும்பு மவட்ட ஐக்கிய தேசிய கட்சி மகாநாட்டின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மக்கள்கட்சி தலைவர் ஒஸிஅபயகுணசேகர தெரிவித்த கருத்து தொடர்பாக தற்போது ஐக்கிய தேசிய கட்சியில் சர்ச்சை எழுந்துள்ளதை தொடர்ந்து இந்நிலமை ஏற்படலாம் என அவ் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

இதே வேளை இதற்கான முடிவு மிக விரைவில் ஐக்கிய தேசிய கட்சியில் எடுக்கப்படும் என்றும் இதன் பின் மக்கள் கட்சியின்அடுத்தநடவடிக்கை கேள்விக்குறியாகவேஇருக்கும் என தெரிவிக்கப் படுகின்றது.

## ஆசிரிய கருத்தரங்கு

யாழ் மாவட்டத்தின் சகல நிலையங்களையும் சேர்ந்த கிறிஸ்தவம் (றோ க) விசேட பாட நெறியினை கற்கும் 2-ம் ஆண்டு பயிலுனர் ஆசிரியர்களிற்கான கருத்தரங்கொன்று யாழ் மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் எதிர்வரும் 7ஆம். 8ஆம் திகதிகளில் காலை 9 00 மணி முதல் நடைபெறும்

# சன்மார்க்க சபையினரின் ஓவிய, சிற்பக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் சன்மார்க்க நுண்கலை மன்றம் நடத்திவரும் ஓவிய, சிற்பக் கருத்தரங்குத் தொடரின் ஏழாவது அமர்வு எதிர்வரும் ஞாயிறு காலையில் மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைப்பீட அரங்கில் நடைபெறவுள்ளது

சன்மார்க்கசபைத் தலைவர் குகானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளஇக்கருத்தரங்கின் தொடக்கவுரையைக் கலாகேசரி ஆ, தம்பித்துரை நிகழ்த்தவுள்ளார் ஈழத்தில் கலையும் கைவினையும், தொழில்நுட்பமும் ஒரு வரலாற்றுநோக்கு என்னும் பொருளில் யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் செ. கிருஷ்ணராசாவும், 20ம் நூற்றாண்டுக் கலைக்கொள்கைகள் என்னும் பொருளில் பிரதிமைக் கலை மாமணி க இராசரத்தினமும் கருத்துரை வழங்கவுள்ளனர் நன்றியுரையைத் திரு சு சிவபாதம் நிகழ்த்தவுள்ளார்

## இல்லப்போட்டி

கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை வியாழக்கிழமை பி. பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு அ திருநாவுக்கரசு தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் அவர்களும், சிறப்புவிருந்தினராக தென்மராட்சிக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு ஜோன்பிள்ளை அவர்களும், கௌரவ விருந்தினராக தென்மராட்சிக் கோட்ட

## ஓவியப்போட்டி

சுகாதார வார ஓவியப்

# மதுவரி பரீட்சைகள் இங்கு நடைபெறாது

(கொழும்புத்துறை)

கொழும்பு மதுவரித்திணைக்கள ஆணையாளரினால் மதுவரி உத்தியோகத்தர்கள், பாதுகாவலர்கள் பதவிகளுக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான எழுத்துப் பரீட்சையையும், நேர்முகப் பரீட்சையையும் யாழ்ப்பாணத்தில் நடத்த முடியாதென கொழும்பு மதுவரித் திணைக்கள ஆணையாளர் திரு டபிள்யு. என். எஸ் சந்திரரத்னா தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சை கொழும்பில் மட்டும்தான் இடம்பெறும் என்று யாழ். அரசாங்க அதிபரும், மாவட்ட ஆணையாளருமான திரு கா. மாணிக்கவாசகர் கேட்டதற்குஇணங்க மதுவரி ஆணையாளர் யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள தகவல் மூலம் அறிவிக்கப் பட்டுள்ளது. (24)

# கலைஞர் விபரங்கள் திரட்டப்படுகின்றன

(கொழும்புத்துறை)

சங்கானை வலிகாமம மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இருபத்தைந்து கிராம அலுவலர்கள் பிரிவுகளிலும் கிராம அலுவலர்களினால் ... ஈடுபட்டுள்ள சகல கலைஞர்களின் விவரங்கள் யாவும் திரட்டப்பட்டு வருகின்றன. (24)

# மட்டு. இடம்பெயர்சேவையில் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பல்

## புனர் வாழ்வுக்கு நிதி இல்லையாம்

(மட்டக்களப்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் இடம் பெயர்சேவை அண்மையில் மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்றது. இச்சேவையின் புனர்வாழ்வு திணைக்கள பிரிவுக்கு சென்ற பல பொதுமக்களிடம் ஒரு நிவாரணமும் இல்லை நிதியில்லை என அதிகாரிகள் கைவிரித்தனர்.

இதேவேளை தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவுடன் சென்ற ஒருவரை அதிகாரிகள் அங்கும் இங்கும் அலைக்கழி

சங்கானை வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இருபத்தைந்து கிராம அலுவலர்கள் பிரிவுகளிலும் கிராம அலுவலர்களினால் சிற்பக்கலை, ஓவியக்கலை, நாட்டியம், நாடகம், சங்கீதம், சிறுகதை, பத்திரிகைத்துறை போன்ற துறைகலைஞர்களின் விவரங்கள் யாவும் திரட்டப்பட்டு வருகின்றன. (24)

## இலவச வகுப்பு

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டு வந்த இந்திரன் கல்வி வளர்ச்சிக் கழகம் ஆண்டு 6-11 வரையான வகுப்புகள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களிலும் பகல், இரவு மீட்டல் வகுப்பு வாரம்தோறும் நடைபெறுகின்றது என விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு அறிவித்துள்ளது.

## உற்சவம்

(கொழும்புத்துறை)

நவாலி அருள்மிகு ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலின் வருடாந்த உற்சவம் கடந்த 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாட்டுடன் நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை அச்சுவினி நட்சத்திரத்தில் தேர்த்திருவிழாவும், 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அமாவாசைத் தினத்தில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (24)

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் இடம் பெயர்சேவை அண்மையில் மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேச

...ழ்வு திணைக்கள பிரிவுக்கு சென்ற பல பொது மக்களிடம் ஒரு நிவாரணமும் இல்லை

# இனரீதியான பிரிவை நீக்க சந்திரிகா செயற்படுகிறார்

## நந்தமித்ர எக்க. பி கூறுகிறார்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட தமிழ்மக்கள் அன்று இந்நாட்டில் இருந்த சிங்களவருடன் நெருக்கமாக பழகி வாழ்ந்தனர். ஒரு சில சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் தமது அரசியல் லாபம் கருதி இந்நாட்டு மக்களைஇனரீதியாக பிரித்துவிட்டனர் இந்தப்பிரிவை நீக்க சுதந்திரக்கட்சியின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்றுள்ள சந்திரிகாகுமாரணதுங்க செயற்பட்டுவருகிறார் இவ்வாறு மாத்தளை மாவட்ட சுதந்திரக்கட்சி எம்பி நந்தமித்ர எக்க நாயக்கா மலையகத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

இந்தியவம்சாவழியினர் இங்குவந்து காடுகளை அழித்து செல்வம் செழிக்கும் நாடாக இந்தநாட்டை மாற்றினர். இருந்தும் அவர்களுக்கு உரிமையோ சலுகையோ வழங்கப்படவில்லை ஐ.தே.க அரசு சிறுபான்மை இனமக்களை உதாசீனம் செய்த காரணத்தினாலேயே தென்மாகாணத்தில் அக்கட்சி தோல்விகண்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆதாரம் வெளிவந்துள்ளது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சமூக பொருண்மிய விஞ்ஞான ஆய்வு இதழான ஆதாரம் 12 ஆவது இதழ் பங்குனி - சித்திரை மாத வெளியீடாக வெளிவந்துள்ளது

இவ் இதழில் தமிழீழ மக்களைப் பட்டினி போட வைக்காத தமிழீழ பொருண்மிய வளங்கள், முல்லைத்தீவு மாவட்டத்தில்கைத்தொழில், ஆக்கி வாயுவினால் ஆக்கிரமிப்பை உடைத்தெறிவோம், யாழ் மாவட்டத்தில் விறகிற்கான கேள்வியும் அதன் நிரம்பலும், வெற்றிலை, விவசாய இரசாயனங்களும் அதன் விளைவுகளும் ஆகிய கட்டுரைகளும், சொந்தமண், மாற்றம், காலம் ஆகிய சிறுகதைகளும், எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும் எனும் நூலுக்கான விமர்சனமும், கவிதைகள் மற்றும் வழமையான அம்சங்களும் இடம்பெற்றுள்ளன:

# கூரேயை தொடர்ந்து 11 அமைச்சர்கள் விலகுவர்

(கொழும்பு)

ஐ தே க பொதுச்செயலர் பதவியிலிருந்து சிறிசேன கூரே இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து மேலும் 11 அமைச்சர்கள் அமைச்சரவையிலிருந்து விலகலாம் என சில செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த அமைச்சர்களின் பதவி இராஜினாமாவை எதிர்பார்த்தே சிறிசேன கூரே தமது பதவியை துறந்ததாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் பதவி விலகவுள்ள அமைச்சர்கள் குறித்த விபரம் ஏதும் தெரியவரவில்லை.

# உற்பத்தி எழுச்சி வார கலைத்துறை முடிவுகள்

உற்பத்தி எழுச்சி வாரத்தையொட்டி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடாத்தப்பட்ட கலைத்துறை சம்பந்தமான போட்டியின் போது கிடைக்கப்பெற்ற ஆக்கங்களில் தரமானவை என தெரிவு செய்யப்பட்டு பரிசுக்குரியவராக தேர்ந்தெடுக்கப்பட்டோர் விபரம்:

சிறுகதை
01-ம் இடம் ''போராட்டம்'' மலரன்னை
02-ம் இடம் ' பொன் வேண்டாம் மண் வேண்டும்'' திருமதி கு ஞானாம்பிகை

கவிதை
01-ம் இடம் வாழநினைத்தால் வாழலாம் வே: தனேஸ்குமார்
02 ம் இடம் தமிழீழ தேரிழுக்கும் கைகள் பொ லோகநாதன்
03-ம் இடம் இன்னும் நீ உணரவில்லையா விமல் -நிக்சன்

கட்டுரை
01-ம் இடம் மேம்பாடுகளைத்தேடி கா. சுஜந்தன்
02-ம் இடம் போராட்ட சூழ்நிலையும் பொருண்மிய மேம்பாடும் பு. செந்தில்ரூபன்
03-ம் இடம் தமிழீழத்தின் இன்றைய பொருளாதார நிலை சி.சிவரூபன்

நாடகம்
01-ம் இடம் மண்தின்ன மாட்டோம் ச.அருள்ராஜ்
02 ம் இடம் ஊருணிநீர் மலரன்னை
03-ம் இடம் வாழ்ந்து காட்டுவோம் ஐதார்த்தன்

கருத்துப்படம்
01-ம் இடம் கு: சூரியகுமார்
02-ம் இடம் க. ரட்ணேஸ்வரன்

இதேவேளை தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவுடன் சென்ற ஒருவரை அதிகாரிகள் அங்கும் இங்கும் அலைக்கழித்ததால் ஆத்திரம் அடைந்த அவர் தமது மனுவை அதிகாரிகளின் முன்பாகவே கிழித்து எறிந்துவிட்டு வெளியேறினார். இதனால் அதிகாரிகள் சிலர் அதிர்ச்சியடைந்து காணப்பட்டனர்.

உதவிக் கல்விப் ... திரு ஜோன்பிள்ளை அவர்களும், கௌரவ விருந்தினராக தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு வீமன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர் மாணவ மாணவிகளுக்கான பரிசில்களை பிரதம அதிதி அவர்கள் வழங்கி கௌரவிப்பார். (86)

## ஓவியப்போட்டி

சுகாதார வார ஓவியப் போட்டி தொடர்பான ஓவியங்களை பாடசாலை அதிபர்கள் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கும்படி யாழ்வலயம் 2 கல்விப்பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# பாதுகாப்புக்காக மன்னாரில் படையினர் மின் விநியோகம்

இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாகக் கூறப்படும் மன்னார்த்தீவில் அடிக்கடி இளைஞர்கள் காணாமற்போகின்றனர்- இராணுவ மற்றும் பொலிஸ் நிலைகளை அண்மித்துச் செல்லும் போது கைது செய்யப்படும் இளைஞர்களிலும் வீடுகள் சோதனையிடப்படும்போது கைதாகும் இளைஞர்களிலும் பலர் விடுவிக்கப்படுவதே இல்லை என கொழும்பிலிருந்து வெளியாகும் வாராந்த சஞ்சிகைஒன்று தகவல் வெளியிட்டுள்ளது

அகதிமுகாம் ஒன்றிலிருந்து கையொப்பமிடச் சென்ற சித்திலிங்கம் புவனேஸ்வரன் ஆகிய இருவரும் அண்மையில் இவ்வாறு காணாமற் போனவர்களாவர் இப்பிரச்சினைகளை தவிர மன்னாரில் மின்சாரம், போக்குவரத்து சீர்கேடுகள், பொருளாதாரத்தடை என்பவையும் காணப்படுகின்றது. கடல் வலயத்தடைச்சட்டத்தினால் மட்டும் 800 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 3500 பேர்பாதிப்படைந்துள்ளனர் பேசாலையில் 34 வீடுகளையும் வங்காலையில் ஐம்பதுவீடுகளையும் படையினர்சேதப்படுத்தியிருப்பதுடன் அவற்றில் சில வீடுகளில் குடியேறியுமுள்ளனர்.

மன்னார் நகரத்தின் பாவனைக்காக மூன்று ஜெனரேட்டர்கள் இருந்தன. இவற்றில் இரண்டு பழுதடைந்துவிட்டன ஒன்றை மட்டும் பாவித்து மாலை 6 30 மணிமுதல் 10 மணிவரை சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்பட்டது இந்நடைமுறை நகரத்திற்குள் மட்டுமே நடைபெறுகிறது, தாழ்வுப்பாடு, எழுந்தூர் எருக்கலம்பிட்டி கிராமங்களில் மின் விநியோகம் இல்லை நகரில் படையினர் தம் பாதுகாப்பு கருதியே மின் விநியோகம் செய்கின்றனர் மன்னாரில் பற்றரிகள் 140 ருபாவுக்கு விற்பனையாகின்றன மன்னார் தீவினுள் உள்ள இராணுவ அதிகாரிகள் சில பொருட்களுக்கு பாஸ் தேவையில்லை எனக்கூறுகின்ற போதிலும் கற்பிட்டியில் உள்ள கடற்படையினர் ஒவ்வொரு பொருட்களுக்கும் பாஸ் கேட்கின்றனர்.

மன்னார்த்தீவில் பணியாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரச அதிகாரிகள் படையினரின் சுற்றிவளைப்புகளின் போது தீவிர விசாரணைக்குட்படுத்தப்படுகின்றனர்

அகதி முகாம்களில் உள்ள அகதிகள் தமக்கு போதுமான நிவாரணப் பணம் கிடைப்பதில்லை எனப்புகாரிடுகின்றனர் ஐந்து பேருள்ள குடும்பத்திற்கு 1200 ரூபா வழங்கப்படுகிறது பத்துப்பேருள்ள குடும்பமாயினும் 1200ரூபாவே வழங்கப்படுகிறது இந்த அகதி முகாம்களில் உள்ள மன்னார் பெருநிலப்பரப்பை இருப்பிடமாக கொண்டசிலர் தம்மை அங்கு கொண்டு சென்றுவிடுமாறு அங்குதாம் சுதந்திரமாகதமது தொழிலை பார்க்கலாம் என்று கூறுகின்றனர் ஆனால் அவர்களை மன்னார் பெருநிலப்பரப்பிற்கு அனுப்ப இராணுவம் மறுத்து வருகின்றது என அச் சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது

இச் சஞ்சிகையை சேர்ந்தவர்கள் மன்னார்த்தீ[illegible]உள்ள இராணுவச் சிப்[illegible] ஒருவரை சந்தித்து வினாவிய போது இராணுவமான எங்களாலேயே மாலை 6 மணிக்குப் பின் வீதியில் இறங்க முடியாமல்இருக்கிறது பொலிசார்எப்படிவீதியில்இறங்கிநிர்வாகத்தை நடாத்த முடியும்? ஜனாதிபதி கொழும்பிலிருந்து வாய்க்குவந்தபடியெல்லாம் பேசலாம் இங்கு சோரிலீடு படுவது நாங்களே அவர்கள் இங்கு வந்து பார்த்தால்தான் இங்குள்ள நிலை தெரியும் என அச்சிப்பாய் குறிப்பிட்டார்

# அண்ணா சிலைக்கு மாலை தி.மு.க. கோஷ்டியில் மோதல்

(சென்னை)

அண்ணா சிலைக்கு மாலையிட்ட விவகாரத்தினால் திமுக கருணாநிதி குழுவுக்கும் வை. கோபாலசாமி ஆதரவுக் கோஷ்டிக்கும் இடையில் பெரும் கைகலப்பு நடைபெற்றது. இச்சம்பவம்பற்றி தெரிய வருவதாவது;

திருச்சி வருகையில் ஒரு பகுதியாக அரியமங்கலத்தில் திருமண நிகழ்ச்சி ஒன்றுக்குச் செல்லவிருந்தார் வை. கோ. அரியமங்கலத்திற்கு டி. வி. எஸ். டோல்கேட் வழியாகத்தான் செல்லவேண்டும் 'வை கோ கடந்துசெல்லும்சமயம், டோல்கேட்டில் இருந்த அண்ணா சிலை மாலையில்லாமல் இருந்தால் நன்றாயிருக்காது' என்றுநினைத்தார். அதனால், பொன்மலை திமுக (கோ) அணி நகரப் பொறுப்புக்குழுத் தலைவர் துரையரசன் அண்ணா சிலைக்கு மாலை போட்டு வைத்திருந்தார்.

இதையறிந்த கலைஞர் அணி திமுக நகர (பொன்மலை) செயலாளர் நாகவேணி வேலு தனது கோஷ்டியோடு அங்கே சென்று அந்த மாலையைத் தூக்கியெறிந்து விட்டார் இது துரையரசனுக்குத் தெரியவர, மீண்டும் மாலைபோடத் தனது பரிவாரங்களோடு சென்றார். தயாராக இருந்த நாகவேணி வேலு, மாலைபோடமுடியாதவாறு அண்ணா சிலையைக் கட்டிப்பிடித்துக்கொண்டார்.

அதைத்தொடர்ந்து பொலிசில் முறைப்பாடு ஒன்றைக் கொடுத்துவிட்டு பொலிசின் துணையோடு மீண்டும் மாலை போட முயன்றார் துரையரசன். அப்போதும் நாகவேணி வேலு விடவில்லை.

'கடந்த ஒரு வருடமாக நான்தான் பொன்மலை நகர திமுக செயலாளராக இருக்கிறேன். இது நான் வைத்த சிலை. சிலை எனக்குத்தான் சொந்தம்' என்று அவர் சொல்ல, நிலைமை மோசமாகியது.

'சிலை யாருக்கு என்பது பிரச்சினையல்ல... அண்ணாவின் சிலைக்கு மாலைபோட ஒவ்வொரு திமுககாரனுக்கும் உரிமை உண்டு நான் மாலையை எப்போதுவேண்டுமானாலும் போட்டுக்கொள்கிறேன்' என்று சொல்லிக் கிளம்பிவிட்டார் துரையரசன். நாகவேணி வேலு குரூப் அண்ணா சிலைக்கருகிலேயே இரவும் பகலும் இருந்து கண்காணித்தது. 'எப்படியும் மாலைபோட்டுவிடவேண்டும்' என்று துரையரசன் கோஷ்டியும் சமயம் எதிர் பார்த்துக் கொண்டிருந்தது.

இதற்கிடையில், கடந்த 2-ம் தேதியன்று துரையரசனின் மகன் கருணாநிதி அந்த அண்ணா சிலை இருந்த பகுதி வழியகச் செல்ல மாலை போடத்தான்வருகிறார்என்று பதற்றமடைந்த நாகவேணி வேலு கோஷ்டியினர் கருணாநிதியைத் தாக்கி, கத்தியால் குத்திவிட்டனர்.

நாகவேணிவேலுவின் தம்பி துரைராஜ் உட்பட நான்கு பேரைப் பொலிஸ் கைது செய்திருக்கிறது.

# தமிழக அரசை கலைக்க மத்திய அரசு முயற்சி

## பி ஜே பி கண்டனம்

(சென்னை)

தமிழக அரசை கலைக்க மத்திய அரசு முயற்சி செய்கிறது என பாரதீய ஜனதா கட்சி கூறியுள்ளது. தமிழ் நாட்டில் விடுதலைப்புலிகள் நடமாட்டம் அதிகமாக இருப்பதாக அமைச்சர் சவான் கூறுவது தமிழக அரசை மிரட்டும் வகையில் உள்ளது.

தனது அரசை கவிழ்க்க மத்திய அரசு முயற்சிக்கின்றது என முதலமைச்சர்ஜெயலலிதா சந்தேகப்படுவதை இது உறுதிப்படுத்துகிறது

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலை மோசமாக உள்ளதாக மத்திய அரசு கூறுகிறது. அப்படிக் கூறுபவர்கள் உத்தரப் பிரதேசத்தை பார்க்க வேண்டும் அங்கு அரசு நிர்வாகத்தை கொள்ளைக்காரர்கள் எடுத்துள்ளனர் எமது அரசியல் சட்டப்படி மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயற்பட வேண்டும் இதை குலைக்க வேண்டாம் என அக்கட்சி கூறுகிறது.

# 55 மில். இந்திய சிறுவர்கள் பணியில் சேர்ந்துள்ளனர்

(டில்லி)

குழந்தைப்பருவம் விலை போகும் அவலம் ஏற்பட்டுள்ளது சகல நாடுகளும் குழந்தைகளினால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை பகிஷ்கரிக்க வேண்டும் இதன் மூலம் உலகில் 14 வயதுக்கு கீழ்ப்பட்ட சிறு குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்படும் அவலத்தை தடுக்க முடியும்.

இவ்வாறு குழந்தை அடிமைத்தனம் மீதான தெற்காசிய கட்டமைப்பின் தலைவர் கைலாஷ் சத்தியார்த்தி வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். இந்தியாவில் இன்று 55 மில்லியன் சிறார்கள் பல்வேறு விதமான தொழில்களிலும் அமர்த்தப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு போதிய ஊதியம் வழங்கப்படுவதுமில்லை இதனால் அக்குழந்தைகளின் குழந்தைப்பருவம் கல்வி அபிவிருத்தி உரிமைகள் மீறப்படுகின்றன.

இதனை வன்மையாக எதிர்த்து குழந்தைகளை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் அண்மையில் 5200 கிலோமீற்றர்பாதயாத்திரைஒன்றும் சத்தியார்த்தியினல் மேற்கொள்ளப்பட்டது இந்த பாதயாத்திரை ஊர்வலம் புது டில்லியில் முடிவடைந்தது

பெரும்பாலும் குழந்தைகள் தீக்குச்சி உற்பத்தி, தோற்பொருள்கள், ஆடை உற்பத்தி போன்ற பல தொழில்களிலும் வெகு சொற்ப சம்பளத்திற்காக ஈடுபடுத்தப்படுவதை தடுக்க எல்லா நாடுகளும் இப்பொருள்களை பகிஷ்கரிக்க வேண்டும் என்று அவர் தமது வேண்டுகோளில் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சென்னை பல்கலைக்கழகத் துணைவேந்தர்

# ஏவுகணை விஞ்ஞானி கலாம் நியமனம் முதலமைச்சர் ஜெயலலிதா எதிர்ப்பு

(சென்னை)

இந்தியவின் பிரபல ஏவுகணைத் தொழில்நுட்ப விஞ்ஞானியும் தமிழகத்தைச் சேர்ந்தவருமான அப்துல் கலாம் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக நியமிக்கப்பட நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது எனினும் இதனை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஏற்க மறுத்துள்ளார்.

இராணுவத்தினருக்கானஏவுகணைகள் உற்பத்தியில் ஈடுபட்டுவரும் அப்துல்கலாமுக்கு அதிக பாதுகாப்பு வழங்க வேண்டியிருக்கும் எனவும் இதற்கான செலவை தமிழக அரசு ஏற்றுக்கொள்ள முடியாத நிலை உள்ளதாகவும் முதலமைச்சர் அறிவித்துள்ளார். அப்துல் கலாமுக்கு எப்போதும் இந்திய அரசின் இஸட் பிரிவு பாதுகாப்பு வழங்கப் பட்டுவருகிறது. எந்நேரமும் துப்பாக்கி ஏந்திய 20 காவலர்கள் இவருக்குப் பாதுகாப்பு வழங்குகின்றனர் உலக அளவில் பிரபலமான அவரைக் கடத்திச்செல்லக்கூடிய பயமும் உள்ளது. இந்நிலையில் அவருக்குப் பாதுகாப்பு வழங்க செலவுகளை ஏற்றுக்கொள்ளும் நிதி நிலைமை தமிழக அரசிடம் இல்லை, இப்படியான நிலையில் ஒரு துணைவேந்தரைக் கொண்டிருக்க வேண்டுமா என முதலமைச்சர் ஜெயலலிதா தரப்பில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது

ஆனால் அப்துல் கலாம் தன்னுடைய ஏவுகணைப் பணி முடிவடைந்துவிட்டது. இத்துறையை விடுத்து கல்வித் துறையில் ஈடுபடத் தமக்கு ஆர்வமாக உள்ளது எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

# வீதி வழிப்பறியை தடுக்க பொலிஸ் அதிகாரிநியமனம்

## சட்டப்பேரவையில் ஜெயலலிதா அறிவிப்பு

(சென்னை)

வீதி வழிப்பறி கொள்ளையர்களை விரைவில் கண்டுபிடிக்க தனி அதிகாரிகள் தேவை என அரசு கருதுவதால் உயர் பொலிஸ் அதிகாரியான ராஜசேகர நாயகர் இதற்கென நியமிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று சட்டப் பேரவையில் அறிவித்தார்.

அண்மையில் சபரிக்காடு மலைப் பகுதியில் நடந்த கொள்ளை தொடர்பாக சோதனை நடத்த நான்கு தனிப்பொலிஸ் படைகள் அமைக்கப்பட்டுள்ளன இப்படைகள் தற்போது தேடுதலில் ஈடுபட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்தார்,

# காங். பொதுச் செயலராக மூப்பனார் தெரிவாகலாம்?

இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு மேலும் இருபுதிய பொதுச் செயலர்கள் நியமிக்கப்படவிருக்கின்றார்கள் இதில்தமிழக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மூப்பனாரின்பெயரும் அடிபடுவதாகக் கூறப்படுகின்றது.

இம்மாதம்குஜராத்தில்நடைபெறவுள்ள காங்கிரஸ் மாநாட்டில் மாநிலகட்சி நிர்வாகிகளை மாற்றி அமைக்க பிரதமர் நரசிம்மராவ் முடிவுசெய்துள்ளார். இதன்படி தமிழகம் உத்தரப் பிரதேசம் உட்பட புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்காக மேலிடக்குழு அந்தந்த மாநிலங்களுக்குச் செல்லவுள்ளது.

காங்கிரஸ் கட்சியில் தற்பொழுது நான்கு பொதுச் செயலர்கள் உள்ளார்கள் இன்னும் இரு பொதுச் செயலர்களைநியமிக்க பிரதமர் நரசிம்மராவ் தீர்மானித்துள்ளார். இது தவிர ஆறு முதல் எட்டு இணைச் செயலர்களை நியமனம் செய்ய ராவ் முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

# கட்சி விரோத நடவடிக்கை 5 காங். உறுப்பினர் நீக்கம்

(சென்னை)

கட்சிவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறி ஐந்து தமிழக காங்கிரஸ் சட்டப் பேரவை உறுப்பினர்கள் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

கே. செல்வராஜ், திருமதி ஜீனத் சகபுதீன், சஞ்சய் இராமசுவாமி, கே. கே. சின்னப்பன், அப்பநடேசன் ஆகியோர் மீதே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் மீதான புகார்கள் கட்சியின் மத்திய ஒழுங்கு நடவடிக்கை குழுவிற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

அண்மையில் தமிழக சட்டப் பேரவையிலிருந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் வெளி நடப்புச் செய்த போது இவர்கள் வெளி நடப்பில் பங்கு கொள்ளாது சபை நடவடிக்கைகளில் தொடர்ந்து பங்கு பற்றியது குறிப்பிடத்தக்கது.


# பொதுக்கூட்ட அறிவித்தல்

நிகழும் 1994-ம் ஆண்டு வைகாசி மாதம் 31-ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 2.00 மணிக்கு சுன்னாகம் வர்த்தக சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெறும் என்பதை சகலதுறை வர்த்தகர்களுக்கும் அறியத்தருகிறேன்.

24.05.94க்கு முன் எதுவித கொடுக்கல் வாங்கல் திருத்தப் பிரேரணைகள் யாவும் சங்கத்திடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி

சுன்னாகம் வர்த்தக சங்கம்

(சி-9336)


# அமைய சுத்திகரிப்புத் தொழிலாளர் பதவிக்கான வெற்றிடம்

(சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் / கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள சுகாதார நிறுவனங்களில் சேவை செய்வதற்காக அமைய சுத்திகரிப்புத் தொழிலாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் பின்வரும் தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

1. 18—40 வயதிற்குட்பட்ட எட்டாம் வகுப்பு (ஆண்டு 9) சித்தியடைந்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
2. தமது பிரிவுக்குரிய பிரதேச செயலாளர் / உ. அ. அதிபர் பிரிவில் கடந்த மூன்று ஆண்டுகளிற்கு குறையாமல் வசித்து இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரிகள் பின்னர் அறிவிக்கப்படும் திகதியொன்றில் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கும் செயல்முறைப் பரீட்சையொன்றிற்கும் தோற்றவேண்டும்
4. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதி: 20 05 94 வெள்ளிக்கிழமை

# வழுதடைந்த விற்றாமிக் மா[illegible] விற்பனைக்குண்டு

# கல்வித் திணைக்களம் - யாழ்ப்பாணம், வலயம் - 1

## முறைசாராக் கல்விப்பிரிவுகளில் மாணவர்களை அனுமதித்தல்

யாழ் மாவட்டத்தில் வலயம் 1இல் உள்ள பின்வரும் பாடசாலைகளில் இயங்கும் முறைசாராக் கல்விப் பிரிவுகளில் பாடசாலையை விட்டு விலகியோருக்காகக் கற்பிக்கப்படும் தொழிற்றிறன் விருத்திப் பயிற்சி நெறிகள் கீழே காட்டப்பட்டுள்ளன. இப் பயிற்சி நெறிகளைப் பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைக் குறித்த பாடசாலை அதிபரிடம் 15-05-94ற்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பிக்கும் ஒருவர் ஒரு பாடநெறியை மட்டும் கற்பதற்கு அனுமதிக்கப்படுவர். பயிற்சிக்காலம் 8 மாதங்கள் ஆகும். பயிற்சி முடிவில் திணைக்களத்தினால் நடாத்தப்படும் அறிமுறை, செய்முறைப் பரீட்சையில் தோற்றி சித்தியடைவோருக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

| கோட்டம் | பாடசாலை | பாடநெறி |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | யா / வண்ணை நாவலர் ம. வித். | 1. படவரைஞர் |
| | | 2 கைப்பணிப்பொருள் உற்பத்தி |
| | யா / வைத்தீஸ்வராக்கல்லூரி | 1. தொலைக்காட்சி திருத்துதல் |
| | | 2. மோட்டார் றிவைண்டிங் |
| | யா / மத்திய கல்லூரி | 1. குளிரூட்டி திருத்துதல் |
| நல்லூர் | யா / கனகரத்தினம் ம. ம. வித். | 1. உடையமைத்தல் |
| | | 2. மோட்டார் வாகனம் பழுது பார்த்தல் |
| | | 3. தமிழ் தட்டெழுத்து-சுருக்கெழுத்து |
| | யா / கொக்குவில் இந்துக் கல். | 1. தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்து |
| | யா / முத்துத்தம்பி ம. வித். | 1 தோற்பொருள் உற்பத்தி |
| சாவகச்சேரி | யா / டிறிபேக் கல்லூரி | 1. ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து |
| | | 2. உடையமைத்தல் |
| | யா / கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வித். | 1. மோட்டார் வாகனங்களில் மின் இணைத்தல் |
| | யா / கைதடி விக்கினேஸ்வரா வித் | 1. உணவு பதனிடல் |
| வேலணை | யா / சேர் வைத்திலிங்கம் | 1. தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்து |
| ஊர்காவற்றுறை | துரைச்சாமி ம. ம. வித். | 2 புத்தகம் கட்டுதல் |
| | | 3. கடல்உணவு பதனிடல் |

[illegible]பித் தகைமைகள்

1. ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து. க பொ. த. (சா/த) சித்தி. ஆங்கில பாடத்தில் 'சி' தரம் இருத்தல் வேண்டும்
2. படவரைஞர் பயிற்சி ஆங்கில மொழி மூலம்: கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் 'சி' தரம் உட்பட க. பொ. த. (சா/த) சித்தி.
3. தொலைக்காட்சி திருத்துதல்: ஏற்கனவே வானொலி திருத்துதல் நெறியைக் கற்றவர்களுக்கு மட்டும்; அத்துடன் கணிதம், விஞ்ஞானம் உட்பட க. பொ த(சா/த) சித்தி.
4. தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்து பயிற்சி - தமிழ் 'சி' தரம் உட்பட க. பொ. த (சா/த) சித்தி.
5. ஏனைய பாடநெறிகள் தரம் 8 சித்தி.

பொது:

1. வேறு அரச கல்வி நிறுவனங்களில் தற்சமயம் கற்றுக் கொண்டிருப்பவர்கள் விண்ணப்பித்தல் ஆகாது'
2. பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுபவர் பாடசாலையை விட்டு விலகியவராக இருப்பதோடு, பயிற்சிக் காலத்தில் விடுகைப் பத்திரத்தைப்பாடசாலை அதிபரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.
3. மாதிரி விண்ணப்பப் படிவத்தை பாடசாலை அதிபரிடம் பார்வையிடலாம்.

(சி-9331)

---

பண்டத்தரிப்பு பரிஷ்ப நோ, கூ, சங்கத்தில் பழுதடைந்த விற்றாமில்க் பால்மா விற்பனைக்குண்டு கால்நடைத் தீனிக்கு வாங்க விரும்புவோர் 12,05,94-ம் திகதிக்கு முன் கூறுவிலை சமர்ப்பித்துக் கொள்வனவு செய்யலாம்

பொது முகாமையாளர்

பண்டத்தரிப்பு பரிஸ் ப, நோ. கூ, சங்கம்

(சி-9338) சங்கானை

---

## தென்னிந்தியத் திருச்சபை
## யாழ். ஆதீனம்

# நூல் வெளியீடு

அன்புடையீர்,

எமது ஆதீனத்தால் புதிதாக வெளிவர இருக்கும் இரு நூல்களான

**யாழ்ப்பாணத்துத் தமிழ் கிறிஸ்தவ கவிஞர்கள்**

— பேராயர் கலாநிதி S. ஜெபநேசன்

**'மகதலேனா மரியாள்'**

(குறுங்காவியம்)

— நாவேந்தன்

## வெளியீட்டு நிகழ்வு

**05-05-1994 மாலை 3.00 மணி**

**யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபம்**

(யாழ். பொது மருத்துவமனை முன்பாக)

மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

அ. ஜெயக்குமாரன்

செயலாளர் தெ இ திருச்சபை

யாழ். ஆதீனம்

(சி-9337)

---

20 05 94

5. சம்பளம் நாளாந்த அடிப்படையில் நாளொன்றிற்கு 63/- ரூபாவும், வாழ்க்கைச் செலவுப் படியும் சேர்த்து வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பத்தில் தயாரிக்கப்பட்டு 20-05-94 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக (நேரிலோ அல்லது தபால் மூலமோ) அனுப்புதல் வேண்டும்.

**வைத்தியகலாநிதி என். விவேகானந்தன்**

பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர்,

சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

சுகாதார சேவைகள்-

மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை,

விக்டோரியா வீதி,

யாழ்ப்பாணம்.

02-05 94

## அமைய சுத்திகரிப்புத் தொழிலாளி பதவிக்கான விண்ணப்பம் -1994

01. முழுப்பெயர்:

02. தபால் விலாசம்:

03. (அ) பிரதேச செயலாளர் / உ.அ. அதிபர்பிரிவு:
    (ஆ) கிராமசேவையாளர் பிரிவும் இலக்கமும்:

04. பால்:

05. (அ) விவாகமானவரா / விவாகமாகாதவரா:-
    (ஆ) பிள்ளைகளின் எண்ணிக்கை:

06. (அ) இலங்கைப் பிரசையா:
    (ஆ) வம்சாவழியாகவா / பதிவு மூலமாகவா:

07. (அ) பிறந்த திகதி:
    (ஆ) தற்போதைய வயது;

08 தேசிய அடையாள அட்டை இலக்கம்:

09. கல்வித் தகைமைகள்:

10. தற்போதைய வன்முறையால் பாதிக்கப்பட்டவராயின் அதன் விபரம்:

11. ஜனசவிய அல்லது உணவு முத்திரைக்கு உரித்தானவராயின் அதன் விபரம்:

12 தொண்டர் சேவையில் இருந்தால் அதன் விபரம்;

13 பிற அனுபவங்கள்:

மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் சரியென நான் உறுதிசெய்கின்றேன்.

விண்ணப்பகாரரின் கையொப்பம்

திகதி:

(சி-9333)

Nallur Branch Library

**சிந்தனைக்கு**

தவறுபோல் தோன்றுவதைத் துச்சமாக கருதாதே. அதற்கு அடியில் தோண்டி உண்மையைத் தேடிப்பிடி

— ஏவ்பரிபக்

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 04-05-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## தாமதமான மதிப்பீடு

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையை இந்தியா நிறுத்த வேண்டும் என அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் விடுத்துள்ள வேண்டுகோளானது, காலம் தாழ்த்தியாயினும் யதார்த்த நிலையை அவ் அமைப்பு புரிந்து கொண்டுள்ளதைக் காட்டுகின்றது. இது இலங்கைத் தமிழ் அகதிகளைப் பொறுத்தும் ஏனைய தமிழர்களைப் பொறுத்தும் இன்றைய நிலையில் முக்கியமானதாகும்.

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை. இலங்கையில் தமிழர்கள் பாதுகாப்புடன், சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் எனச் சிறிலங்கா அரசாங்கம் கூறலாம். அதனைப் பொறுத்து அவ்வாறு கூறுவது அவசியமானது மாகும். ஆனால், யதார்த்த நிலை வேறு விதமானது. இலங்கையில் தமிழரின் சுதந்திரம், பாதுகாப்பு என்பன எப்பொழுதும், எங்கும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

தென்னிலங்கையில் தமிழர்கள் சிங்களவர்களோடு சகோதரர்கள்போல் வாழ்கின்றார்கள் என அரசு கூறுகின்றது. ஆனால், எப்பொழுது கைது செய்யப்படுவோம், எப்பொழுது சிறையில் அடைக்கப்படுவோம் என அஞ்சி நடுங்குவதே அங்குள்ள தமிழரின் வாழ்வாக உள்ளது. இதனால் வெளியில் நடமாடுவதையும், பொது வைபவங்களுக்குச் செல்வதையும் எவ்வளவு குறைக்க முடியுமோ அந்தளவிற்கு தமிழர் குறைத்துக் கொண்டுள்ளனர்.

இதேபோன்றே, கிழக்கை தாம் 'விடுவித்து விட்டதாக' சிறிலங்கா அரசு கூறுகின்றது. ஆனால் அங்கு இராணுவ ஆட்சியே நடைபெறுகின்றது. இதனை அங்குள்ள அரச சார்பு குழுக்களே கூறுகின்றன. விரும்பிய நேரத்தில் கைது, சித்திரவதை, சிறை என்பன வழக்கமான சம்பவங்களாகும். இரு வாரங்களுக்கு முன்னர் கூட பனிச்சங்கேணியில் 56 வீடுகளை தீயிட்டுக் கொளுத்திய இராணுவம் ஒருவரை சுட்டுக் கொன்றதோடு பலரை வன்மையாகத் தாக்கியும் உள்ளது.

இதேசமயம் வடக்கில் விமானத் தாக்குதல்,

# மேற்குலகில் தீவிரமாக அதிகரித்துவரும் இளவயதுக் கொடூரக் கொலைகள்!

எவரும் எண்ணிப்பார்க்க முடியாத வகையில் நடைபெறும் குரூரத்தனமான படுகொலைகள். மனவிகாரங்களின் வெளிப்பாடுகள், சீர்கெட்டு முறைதவறிய வாழ்க்கை முறைகள் என ஏராளமான செய்திகள்மிகத்தாராளமாக இப்போது அமெரிக்கா, பிரித்தானியாவிலிருந்து வெளிவந்தவண்ணமேயுள்ளன மேற்குலக நவநாகரிகத்தின் சிகரங்களைத் தொட்டதாக, அதிநவீன தொழில்நுட்ப அறிவின் ஆற்றலை கண்டறிந்தவர்களாகக் கருதப்படும் இவ்விரு நாடுகளினதும் சமூக வாழ்க்கையியலோ அதலபாதாளத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும், இம்முரண்பாடு இன்று பெருத்த சமூகச் சிக்கலாக உருவெடுத்துவிட்டது.

மிக அண்மையிலே பிரித்தானியாவின் லிவர்ப்பூல் நகருக்கு அண்மையில் நடைபெற்ற படுகொலையொன்றின் குரூரம் எவரின் குருதியையும் உறைய வைக்கக் கூடியது ஏனைய சக மேற்குலக நாடுகளே பிரித்தானியாவை கடுமையாகக்கண்டிக்க வேண்டியதாயிற்று பிரித்தானிய அரசோ உலக மனிதத்தின் முன் தலைகுனிய வேண்டியதாயிற்று. கடைத்தெருவில் வேடிக்கை பார்த்து விளையாடிக்கொண்டிருந்த இரு 10 வயதுச் சிறுவரிடம் தனது 2 வயது பச்சிளம் பாலகனைப் பார்க்குமாறு கூறி பக்கத்துக்கடை சென்ற தாயொருத்தியின் இன்றைய துயரம் சொல்லுந்தரமன்று. இச்சிறுவர்கள் இருவரும் தாய்க்குத் தெரியாமல் குழந்தையை 2 மைல் தூரத்திற்கு அப்பால் இருந்த புகையிரதக் கடவைக்குக் கடத்திச்சென்று குழந்தை கதறக்கதற வேடிக்கை பார்த்து கல்லால் அடித்து உதைத்து தூக்கிவீசி பின்னர் இரும்புத்துண்டு ஒன்றால் குழந்தையின் மண்டையைப் பிளந்து கொன்று பின்னர் தண்டவாளத்திற்குக் குறுக்கே புகையிரதத்தால் குழந்தை துண்டாடப்படட்டும் என்ற நோக்கோடு போட்டுச் சென்றனர். நவீன சந்தையில் பாதுகாப்பிற்கென பொருத்தப்பட்ட வீடியோ படப்பிடிப்புக்கருவி காட்டிக்கொடுத்ததால் இரு சிறுவரும் அகப்படநேர்ந்தது. நீதிமன்ற விசாரணையின் போது அவர்கள் கெட்ட ஆவி ஒன்று தம்மைப் பீடித்திருப்பதாக அதனைத் திருப்திப்படுத்தவே இவ்வாறு செய்ததாகக் கூறினார்கள் நீதிபதியோ என்றும் தான் கேட்டிராத காட்டுமிராண்டிச்செயல் இதுவெனக்கூறி மேற்குலகின் வன்முறை நிரம்பிய நெறிகெட்ட வீடியோப் படங்களே இதற்குப் பிரதான காரணம் எனச் சினம்கொப்பளிக்கக் கூறினார் விசாரணையின்போது இச்சிறுவர்களில் ஒருவனின் தந்தை வன்முறை, பயங்கரம் நிரம்பிய வீடியோ படங்களை வீட்டில் பார்ப்பது வழமை என்றும் சம்பவம் நடப்பதற்கு முன் அவர் பார்த்த படம் ஒன்று தீய ஆவிகள் பற்றியதாக அப்படத்தில் சில காட்சிகள் இச்சிறுவர்கள் செய்த கொலையை ஒத்ததாக அமைந்ததும் தெரியவந்துள்ளது இடபோது இக்கொலையின் தாக்கம் மேற்குலகம் முழுவதையுமே அதிரவைத்து தம்மை தமது சமூகத்தை ஒரு சுய பரிசோதனைக்கு உட்படுத்தத் தள்ளிவிட்டது. பிரித்தானியாவாலோ முடிவற்ற விவாதங்கள் தொடர்கின்றன அரசாங்கமோ இச்சிறுவர்கள் கற்ற கல்விச்சாலையைநடாத்திய சேச் ஒவ் இங்கிலண்ட் (Church of England) திருச்சபை அறநெறிக் கல்வியைப் போதிக்கவில்லையென கடுமையாக சாட அவர்களோ தாம் அதை மறுத்து அரசைச்சாட கல்விக்குரிய கவனம் செலுத்தப்படவில்லையே பொதுவாக கண்டனம் கிளப்ப பெருத்த குழப்பம் நிலவுகின்றது சமூகவியலாளரே பிரித்தானிய சமூக விழுமியங்களே இன்று ஆட்டம் கண்டுவிட்டதாக மோசமடையும்பொருளாதார நிலையால் சிதைவடையும் குடும்பஉறவுகள் பற்றி கவலை தெரிவிக்கின்றனர்.

இது இங்கிலாந்து நிலை. அமெரிக்காவிலோ சகலவிதமான மனவிகாரங்கள், வக்கிரகங்களைக் கொண்ட மாந்தரைத் தோற்றுவிக்கும் பெரு நகரங்களில் இன்று என்னமும் நடக்கலாம் என்கிற நிலை திடீரென எவரும்பெருவீதியிலோ, நவீன சந்தையிலோ ஓடும் விரைவு வண்டிகளிலோ துப்பாக்கியை எடுத்து எவர்மீதும் குண்டுகளை வீசலாம் இது இப்போது அங்கு வழமை ஆனால் அண்மைக்காலமாக புதிய வகை சிக்கலொன்று அங்கு அமெரிக்கப்பெற்றோர்களை பீடித்து வருகின்றது இன்று பெரு நகரங்கள் மட்டுமல்ல புறநகரங்களி கூட சிறுவர் சிறுமியர்க்கு பாதுகாப்பற்ற பகுதிகளாகி விட்டன அண்மைக்காலமாக தனியாக பாடசாலை செல்லும், படிக்கச் செல்லும், விளையாடச்செல்லும் பாலகரை மனவிகாரம் படைத்தவர் கடத்திச் சென்று வதை செய்து கொன்றுவிடுகின்றார்கள் அண்மையில் 8-10 வயது சிறுமியர் இருவர் இவ்வாறு கொலை செய்யப்பட்டனர் இன்னும் பல விடங்களில் மோசமாக பல பிள்ளைகள் தெருவில் தாக்கப்பட்டு படுகாயப் படுத்தப்பட்டு விடுகின்றனர் (கடந்த மாசி மாதத்திலிருந்து லொஸ் ஏஞ்சேல்ஸ் பகுதியில் இத்தகைய 32 தாக்குதல்கள் நடந்துள்ளது ) இப்போது நிலைமைகள் வெகு பரிதாபகரமானதாகிவிட்டன அனேகமான பிள்ளைகள் இப்போது தனித்து வீதியில் இறங்கவோ வெளிச்செல்லவோ அச்சமுறுகிறார்கள் இப்போது பல புறநகர தெருவீதிகள் மாலை நேரங்களில் சிறுவர் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடக்கின்றன அவர்கள் சுதந்திரமாக தன்னிச்சையாக ஓடியாடி விளையாடும் காட்சி இப்போது காணக் கிடைக்காது. இது அமெரிக்க நிலை

### வே. பாலகுமாரன்

மிக அண்மையில் யுனிசெவ்வால் வெளியிடப்பட்ட ஆண்டறிக்கையில் இவ்விரு நாடுகளும் 1980 களில் இருந்தே தமது குழந்தைகள் நலன்கள் தொடபாக அக்கறை காட்டுவதையும் அதற்கான நிதியொதுக்கீடுகளையும் குறைத்ததாக தெரிவிக்கப்படுகின்றது 10 வளர்ச்சியடைந்த நாடுகளில் இவ்விரண்டுமே இவ்வாறான மோசமான நிலையை கொண்டிருக்கின்றன கைத்தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் நடைபெறும் இளவயதின் கொலைகளில் பத்தில் 9 அமெரிக்காவிலே நடக்கின்றது இங்குதான் ஏனைய மேற்குலக நாடுகளைவிட இரட்டிப்பு மடங்காக அதாவது 20 வீதம் பாலர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்றனர் 1986 வரையின் கணிப்பொன்றின்படி வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்கள் எண்ணிக்கை பிரித்தனியாவில் இரட்டிப்பு ஆகியதாகவும் அமெரிக்காவில் 40 வீதத்தால் அதிகரித்ததாகவும் யுனிசெவ் கூறுகின்றது எனவே இப்போதைய நிலையென்னவென்றால் 1970 களில் நிலவிய நிலைமைகளை விட பின்தங்கிய நிலையே சிறார் நலன்கள் இன்று இவ்வீரு நாடுகளில் உள்ளது என்பது தான்

இவை ஒருபுறமிருக்கட்டும் இத்தகைய வளர்ச்சியடைந்த கைத்தொழில் வல்லாதிக்க நாடுகளைப் பின்பற்றி தாமும் பெரு நகரங்களை உருவாக்கிவரும் மூன்றாம் உலக நாடுகள் நிலைமையைப்பாருங்கள் இத்தகைய பெரும் நகரங்களிலே இன்று இலட்சக்கணக்கிலே வீதிகளிலே வாழும் ஒரு புதியசமூகமாக இளம் சிறார்கள்உருவெடுக்கிறார்கள் பிறேசில் எப்போதுமே இத்தகைய புதிய சந்ததிபடும்பாட்டை காணதக்கநாடாக விளங்குகிறதுபிறேசில்நகரங்கள்குறிப்பாக அதன் தலைநகரான றியோ டி ஜெனரோவில் நாளொன்றுக்கு சராசரி 4 வீதிவாழ்சிறார்கள் கொலை செய்யப்படுவது சாதாரண சராசரி விடயம் இது ஒரு புள்ளி விபரம் 1990 இல் 306 பேர் 1992ல் 424 சிறார் 1993 முதல் ஆறுமாதத்தில் 300 சிறார் கொலையான விபரம் இது ஏனைய நகரங்கள் இதற்குசளைத்தன அல்ல அவற்றின் விபரங்கள் இங்கே சேர்க்கப்படவில்லை அண்மையில் தேவாலயமொன்றின் அருகில் குளிரில் விறைத்து ஒருவரை ஒருவர் அணைத்தபடிகிடந்த 11—17 வயதிற்கும் இடைப்பட்ட கறுப்பின சிறார் எண்மரை நள்ளிரவில் ஐவரை கொண்ட கொலைக் குழுவொன்று சுட்டுக்கொன்றது தப்பிய சிறுவன் ஒருவன் கொடுத்த தகவலின்படி கைதானோர் நகரக்காவல் துறையினர் ஆவர் இவர்களும் ஏனைய சில கொலைக் குழுக்களும் வன்முறைகள் நிரம்பிய பிரேஸில் வீதிகளை ''சுத்தப்படுத்த'' இதுவேவழி என இறங்கியுள்ளனர் மிகுதியானோர் வன்முறை இரகசிய உலகின் போதைப் பொருள் கடத்தல் மன்னர்களின் போட்டிக்குழுக்களால் கொல்லப்படுகின்றனர் இன்று 70க்குமேற்பட்ட இத்தகைய போட்டிக் குழுக்கள் இவ்வீதிவாழ் சிறுவர் சிறுமியரையே தமது சமூகவிரோதச்செயல்கட்கு பயன்படுத்துகின்றனர் இன்று 2 இலட்சத்திலிருந்து 30 இலட்சம் வரை என மதிப்பிடப்படும் இவ் இளம் வயதினர் தெருவீதிகளிலே படுத்துறங்கி வாழ்கின்றனர் இவர்களை என்ன செய்வது? சீர்திருத்தப் பாடசாலைகளோ இப்போது குற்றவாளிகளை உற்பத்தியாக்கும் தொழிற்சாலைகளாகிவிட்டன இவர்கள் எல்லோரையும் ஏதோ ஒருவழியில் அகற்றினாலும்இவர்கள் இடத்தை இட்டு நிரப்ப இன்னமும் பலர் றிசேர்வ் படையணியாக தயாராக இருப்பதாக பிரேசிலில் யுனிசெவ் இயக்குநர் கூறுகிறார், இது நவநாகரிகம் எமக்களித்த நன்கொடையல்லவா?

நாடுகளில் உண்மையான செல்வங்கள் என யுனிசெவ் கூறும் இச்சிறார்களின் நிலை உலகெங்கும் இவ்வாறுதான் உள்ளது யுனிசெவ் இப்போது கூறுவது தான் இது இந்த உலகிலே ஒரு நாள் வரும் அன்று நாடுகளின் முன்னேற்றம் வளர்ச்சி என்பது அந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சியையோ அல்லது இராணுவ வலிமையையோ அல்லது பெருநகரங்களின்கண்கொள்ளாக் காட்சிகளை மட்டும் வைத்தோ கணிப்பிடப்படாது அவ்வவ் நாடுகளில் வதியும் மக்களின் கல்வி போசாக்கு ஆரோக்கியம் என்பவற்றையும் தம்மைப் பாதிக்கும் தீர்மானங்களில் அவர்கள் குரல் எவ்வளவு தூரம் ஒலிக்கிறது என்பதை பொறுத்தும், பின்தங்கிய, வறிதில் அவலங்கட்கு உட்படும் சமூகத் தொகுதியின் நல்வாழ்வைப் பொறுத்துமே கணிப்பிடப்படும் என்கிறது

அந்தநாள் என்று வரும்என்பதும் அந்நாள் வரும்வரை உலகின் எதிர்காலச் செல்வங்கள் நிலை என்னவென்பது எவராலும் விடை கூற முடியாத வினாவாகவே இப்போதைக்கு இருக்கப்போகிறது.

## பாகிஸ்தான் கலவரம்

## அக்னி ஏவுகணை திட்டம்

ளது.

இதேசமயம் வடக்கில் விமானத் தாக்குதல், எறிகணைத் தாக்குதல், துப்பாக்கிச் சூடு என மக்கள் மீது தொடர் தாக்குதல்கள் நடத்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றது அத்தோடு, பல்லாயிரக்கணக்கான துருப்புக்கள் நவீன ஆயுதங்கள் சகிதம் பெரும் தாக்குதல் ஒன்றிற்கும் தயாராகவுள்ளன

ஆனால், இந்நிலையானது கடந்த நான்காண்டு காலப்பகுதியில் புதியதொரு சூழ்நிலை அல்ல. இரண்டாம் ஈழப்போர் ஆரம்பத்தில் இருந்தே இந்நிலையே இருந்து வருகின்றது போர் எப்பொழுதும் ஓயவுமில்லை அதன் அச்சுறுத்தல் நிற்கவும் இல்லை. இந்நிலையில், தமிழகத்தில் இருந்து அகதிகளைத் திருப்பி அனுப்புவதென அப்பொழுது எடுத்த முடிவே தவறானதும், மனிதாபிமானமற்றதாகவும் இருந்தது. ராஜீவ் காந்தி கொலையினால் அரசியல் லாபம் தேட முயன்ற இந்திய அரசியற் கட்சிகள், குறிப்பாக தமிழகக் கட்சிகள் இவ்விவகாரத்தில் தீவிரமாக இருந்தனவென்றால் அதற்கு ஒத்துழைப்பு வழங்க அ. ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் தயாராக இருந்தமை இவர்களின் தவறே ஆகும். இது இலங்கையின் அரசியற் சூழ்நிலை பற்றிய தவறான கணிப்பீட்டாலோ, அன்றி வேறு லாப நோக்கிலோ ஏற்பட்டதாக இருக்கலாம்.

இத்தவறான நடவடிக்கை காரணமாக இலங்கையின் அரசியற் சூழ்நிலை பற்றி உலகில் தவறானதொரு கணிப்பீடு எழுந்தது. இப்பாதிப்பு மேற்குலகிலும் இருந்தது இதன் வெளிப்பாடாகவே அங்குள்ள தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பாகவும் மேற்கு நாடுகள் சிந்திக்கத் தொடங்கின. இதனால் சிறிலங்கா அரசாங்கத்தின் பிரசாரத்தை ஏற்று அகதிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடத்தியதோடு, திருப்பி அனுப்புவதில் தீவிர கவனமும் செலுத்துகின்றனர்.

இந்நிலையில், தற்பொழுதாவது அ- ஐ- நா- உயர்ஸ்தானிகராலயம் கள நிலவரத்தை சரியாக மதிப்பீடு செய்தமை யதார்த்த நிலையை உலகிற்கு வெளிக்காட்ட உதவக் கூடியதாகும். இருப்பினும், சில நாடுகள் தம் முன் வைத்த காலை இனிப் பின் வைக்குமா என்பது பற்றி எதையும் கூறிவிட முடியாது. ஆனால், அவை தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாது விட்டால், அவற்றின் இம் முடிவிற்கான பொறுப்பில் கணிசமான பங்கை அ. ஐ. நா- உயர்ஸ்தானிகராலயம் ஏற்கத்தான் வேண்டும்.

# பாகிஸ்தான் கலவரம் இராணுவம் அழைப்பு

## துப்பாக்கி சண்டையில் 6 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

கராச்சியில் குழப்பம் நிலவும் பகுதிகளுக்கு பாகிஸ்தானிய இராணுவம் நேற்று அதிகாலை அனுப்பப்பட்டதையடுத்து அங்கு துப்பாக்கிச் சண்டை நடைபெற்றுவருகிறது நான்கு நாட்களாக நடைபெற்ற வன்முறைகளை நிறுத்த படையினர் அங்கு அனுப்பப்பட்டனர்.

வன்செயலின் போது 26 பேர்மரணித்தனர் படையினர் அழைக்கப்பட்ட பின்னர் நடந்த மோதல்களில் 6 பேர் பலியாகினர் மூன்று படையினர் உட்பட பலர் காயமடைந்தனர்- கலகத்தை அடக்க பொலிசாரால் முடியாது போனதால் நகரில் இராணுவத்தின் சேவை பெறப்பட்டது, கலகக்காரர்கள் நவீன சந்தை வங்கி என்பனவற்றை தீயிட்டுக் கொளுத்தி விட்டனர் கொழுந்துவிட்டெரியும் வாகனங்களும் டயர்களும் வீதியெங்கும் காணப்படுகின்றன.

முஸ்லிம் அமைப்பொன்றின் நான்கு பிரமுகர்கள் கைதானதைத் தொடர்ந்து ஆத்திரமடைந்து ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது பொலிசார் துப்பாக்கிச் சூடு நடத்தியதையடுத்து கடந்த வெள்ளியன்று கலவரம் மூண்டது குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-05 04 -புதன் இரவு

08.01-தவில் சக்கரவர்த்தி வலங்கைமான் சண்முகசுந்தரம் அவர்கள் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி
08-20- ஏர்முனை-வதிவிட வேளாண்மை தனி நடிப்பு
08-30-செய்திகள்
08-40-கடற் கரும்புலிகள் -கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி 'கடலில் கலந்தவர்கள்'

1994.05.05-வியாழன் காலை

07-02-மாவீர வணக்கம்
07-15-விடுதலை கீதங்கள்
07-30-செய்திகள்
07-35-பத்திரிகைச் செய்திகள்
07-40-தொடர்ந்து விடுதலை கீதங்கள்

# ஜனாதிபதி கிளிங்டன் ஒரு பெண் பித்தர்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டன் ஒரு பெண்பித்தர் என்று அவருக்குப் பாதுகாப்பு அதிகாரியாக இருந்தவர் குற்றம் சாட்டியுள்ளார்.

கிளிங்டன் ஆர்க்கன்ஸ் மாநில கவனராக இருந்த போது அவருக்குப் பாதுகாப்பு அதிகாரியாக இருந்த எல். டி. பிரவுண் என்பவரே கிளிங்டன் மீது இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

பாதுகாப்பு அதிகாரியாக நான் இருந்தபோது கிளிங்டனுக்கு தேவையான பெண்களை நான் அழைத்துச் செல்வது வழக்கம். கிளிங்டன் எல்லாப் பெண்களோடும் உறவு கொண்டாரா என்பது தெரியாது ஆனால் ஒருபெண்ணைப் பார்த்தாலும் "அது யார்? என்ன செய்கின்றார்? அவரது ரெலிபோன் நம்பரைக் கண்டுபிடி என்று என்னிடம் கூறுவார் நானும் அப்படியே செய்வேன்.

கிளிங்டன் பற்றிய உண்மைகளை நாம் மற்றவர்களுக்குக் கூறத்தயங்குவதற்குக் காரணம் அவருக்குப் பயன்பட்டது போக எஞ்சியதை நாங்களும் அனுபவித்ததே காரணமாகும் என்றும் அவர் தெரிவித்தார்

இதேசமயம் கிளிங்டன் தருவதாக உறுதி அளித்த வேலையை பிரவுணுக்குக் கொடுக்காததே இக் குற்றச்சாட்டிற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

வன வளம் இல்லையேல்
மழை வளம் இல்லை

# அக்னி ஏவுகணைத் திட்டம் கைவிடப்படமாட்டாது

நரசிம்மராவ்

(டில்லி)

அக்னி ஏவுகணைத் திட்டம் கைவிடப்பட மாட்டாது என்றும், பிராந்திய அணு ஆயுதப் பரவல் தடுப்பு திட்டத்தில் கைச் சாத்திடும் எண்ணம் இந்தியாவுக்கு கிடையாது என்றும் இந்தியப் பிரதமர் பி. வி- நரசிம்மராவ் கூறியுள்ளார்-

அவர் மேலும் கூறுகையில்; அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தம் பாரபட்சமற்றதாகவும், அனைவருக்கும் ஏற்புடையதாகவும் இருக்க வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டில் மாறுதல் எதுவும் இல்லை எனவும் தெரிவித்தார்-

அத்துடன் இந்தியா முழு ஆயத்த நிலையில் இருப்பதாகவும், இந்தியாவின் பாதுகாப்பு தேவை தொடர்பாக வெளியாரின் ஆலோசனை தேவைப்படவில்லை எனவும் குறிப்பிட்டார்-

# ராம்தாஸ் குழுவினருக்கே பாட்டாளி மக்கள் கட்சி

(சென்னை)

டாக்டர் ராம்தாஸ் தலைமையிலான குழுவினர்களே பாட்டாளி மக்கள் கட்சியாக சட்டரீதியாக அங்கீகரிக்கப்படுவர் என்று தேர்தல் ஆணையகம் தீர்ப்பளித்துள்ளது.

இக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட பண்ருட்டி இராமச்சந்திரன் தலைமையிலான குழுவினரும், பாட்டாளி மக்கள் கட்சி என்று கூறிவருவது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கு கடந்த வெள்ளியன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது அவ்வழக்கு விசாரணையின் முடிவில் தீர்ப்பளித்த தேர்தல் ஆணையகம் பாட்டாளி மக்கள் கட்சியாக டாக்டர் ராமதாஸ் தலைமையிலான குழுவினரையே அங்கீகரித்துள்ளது.

# புயலினால் நூறு பேர் பலி

(டாக்கா)

பங்களாதேசில் நேற்று முன்தினம் வீசிய பெரும் புயலினால் நூறுபேர் உயிரிழந்திருக்கலாம் எனவும் ஐந்நூறு பேர் வரையில் காயமடைந்திருக்கலாம் எனவும் செய்திகள் கூறுகின்றன. லட்சக்கணக்கானோர் தமது வீடுகளை இழந்திருப்பதாகவும் தெரிய வருகின்றது.

## காங்கிரசற்கு ஆதரவு

மைலாப்பூர் மற்றும் பெருந்துறை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி நிறுத்தும் வேட்பாளர்களுக்கு ஆதரவு அளிப்பதென எம் ஜி. ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானம் எடுத்துள்ளது.

இக் கட்சியின் பொதுச் செயலாளர் எஸ். திருநாவுக்கரசு நேற்று சென்னையில் வெளியிட்ட ஒரு அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

# கல்விசார் உத்தியோகத்தருக்கு பல்கலையில் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக் கழகத்தில் கல்விசார் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை தீவிரமடைந்து வருகிறது.

இப் பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பீடங்களிலும் இவ்வாறான கல்விசார் உத்தியோகத்தர்களிற்கு கடும் பற்றாக்குறை நிலவிவருகிறது.

கல்விசார் உத்தியோகத்தர்களின் அனைத்துத் தரங்களிலும் பலவெற்றிடங்கள் நிலவிவருகிறது

குறிப்பாக மருத்துவபீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம் ஆகிய பீடங்களிலேயே அதிகளவான கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிலவிவருகிறது. மேற்படி பீடங்களின் ஒவ்வொரு கற்கைத் துறையும் இவ்வாறான பற்றாக்குறை காரணமாக முழுமையான கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது சில துறைகள் ஓரிரு கல்விசார் உத்தியோகத்தர்களுடன் இயங்கிக் கொண்டிருப்பதாகவும் இன்று இப்பல்கலைக் கழகத்துக்கு பிரச்சினையாக உள்ள முக்கிய விடயமாக இவ் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையேகாணப்படுவதாகவும் இப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் குணரட்ணம் தெரிவித்தார்.

இவற்றைவிட இப்பல்கலைக் கழகத்துக்குத் தேவையான எரிபொருள்களும் பற்றாக்குறையாகஉள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேலும் இப்பல்கலைக் கழகத்துக்குத் தேவையான காகிதாதிகளையும் ஏனைய பொருள்களையும் எடுத்து வருவதிலும் பல சிரமங்கள் தோன்றியுள்ளன

இவ்வாறான பிரச்சினைகளுக்கு சாத்தியமான தீர்வு ஏற்படுத்தும் முயற்சியாகவும் இப்பல்கலைக் கழகப் சம்பந்தமான ஏனைய பல விடயங்களைக் கவனிப்பதற்காகவும் துணைவேந்தர் குணரட்ணம் நேற்று கொழும்பு நோக்கிப் புறப்பட்டுள்ளார். கொழும்பு செல்லும் இவர் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுத் தலைவரையும் ஏனைய அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்துவார் என்று தெரியவருகிறது.
(க)

## நடுகல் நினைவலைகள்

### 65ஆம் நாள்



## லெப்டினன்ட் மயூரன்

(சண்முகராசா செந்தில்ராஜ்)
(திருவம்மான்)

**கரம்பொன், ஊர்காவற்றுறை**

## சாரணீயம் வெளியீடு

(மானிப்பாய்)
கதிர் வெளியீட்டினால் ''சாரணீயம்'' எனும் நூல் கடந்தவாரம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் யாழ் மாவட்ட சாரண ஆணையாளர் திரு. இ. மகேந்திரன் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. இந்நூலில் சாரணர்களுக்கான புதிய தகவல்களும், சாரணீயம் சம்பந்தமான பலகட்டுரைகளும் உள்ளடங்கியுள்ளன.(07

# ஜனாதிபதியுடன் கைகுலுக்கியது பூரணசரணாகதி என்பதாலல்ல

## - தொண்டமான்

(கொழும்பு)
ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுடன் நான் கைகுலுக்கியதற்காக பூரணசரணாகதி அடைந்து விடவில்லை. ஜனாதிபதி என்னை அழைத்ததால் தான் நான் அவரிடம் சென்றேன் பேச்சுவார்த்தை நடத்தினேன்பேச்சுவார்த்தைகளில்கடைப்பிடிக்கப்படும் முறைகளுக்குஏற்பவேநான்நடந்து கொண்டேன் என அமைச்சர் செள. தொண்டமான் தெரிவித்தார்.

நான் ஜனாதிபதியுடன் கைகுலுக்கிக் கொண்டதால் எமது சமுதாய நலன்களை விட்டுக் கொடுக்கவில்லை எமது மக்களின் ஜீவாதார உரிமைகள் பிரச்சினைகளை மறந்து விடவில்லை.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளி மக்களில் இந்திய குடியுரிமை பெற்றவர்கள், இந்தியகுடியுரிமைக்கு விண்ணப்பித்தவர்கள் உட்பட அனைவரும் இந்த நாட்டு பிரஜைகளே இவர்கள் அனைவரினதும்நலன்களையும்கவனிக்க வேண்டியது எமது கடப்பாடாகும் என தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

## மனித உரிமை மீறலில் ஈடுபட்டோருக்கு விருது

மனிதஉரிமைமீறல்களில்ஈடுபட்ட பொலிஸ்காரர்களுக்கு சிறிலங்கா அரசு விருது வழங்கிக் கெளரவித்திருப்பதாக கிறிஸ்டியன் வேக்கர் என்ற சஞ்சிகை தெரிவித்துள்ளது.

1980-ம் ஆண்டிலிருந்து 1992-ம் ஆண்டுவரையான காலப்பகுதியில் 87 பொலிஸ் அதிகாரிகள் இவ்வாறு கெளரவிக்கப்பட்டனர் எனவும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டனஎனவும், இப் பொலிஸ் அதிகாரிகள் பல மனிதஉரிமை மீறல் சம்பவங்களில் ஈடுபட்டது தெரியவந்திருக்கிறது எனவும் அச் சஞ்சிகை மேலும் தெரிவித்துள்ளது.

## பாஸ்கரலிங்கம் நாடு திரும்பமாட்டார்?

(கொழும்பு)
அண்மையில் பாரிஸுக்கு சென்ற நிதி அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் நாடு திரும்பமாட்டார் என்றும் அவர் தொடர்ந்து பாரிஸ்சில் இருப்பார் எனவும் தெரியவருகின்றது. பாரிஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற இவர் இன்னமும் நாடு திரும்பவில்லை.

சென்றவருடம் ஜனாதிபதி கொலை செய்யப்படும்போது இவர் பாரிஸ் சென்றிந்தார் என்றும் இவரின் கொலையை தொடர்ந்தும் நாடு திரும்பிய போது அவர் தொடர்பாக அரசாங்கத் தரப்பு நடந்து கொண்ட விதம் குறித்து இவர் திருப்தியின்றி இருந்தார் என்றும் இவருக்கு எதிரான பல குற்றச்சாட்டுக்கள் சுமத்த தயாராக இருந்தமை தெரியவந்ததை தொடர்ந்து இவர் இம் முடிவை எடுத்து இருப்பதாகவும்மேலும் தெரியவருகின்றது.

இதேவேளை எயார் பஸ் கொள்வனவு தொடர்பான பண ஊழலுக்குப் முழுப் பொறுப்பும் நிதி அமைச்சின் செயலாளர் ஏற்க வேண்டும் என்றும் குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் எதிர்வரும் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளதால் இவர் இவ்வாறு வெளிநாட்டில் வாழ விருப்பதாக தெரியவருகின்றது.

## புதிய நேர அட்டவணையில் தனியார்கல்வி நிறுவனம்

கல்வி வலயம் 2-ல் இயங்கும் பாடசாலைகள் இரண்டு நேர பாடசாலைகளாக இயங்கவிருப்பதனால் வடமராட்சி, மருதனார்மடம், பண்டத்தரிப்பு கல்விக்கோட்டங்களைச் சேர்ந்த தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் அனைத்தும் நாளை வியாழன் முதல் ஆண்டு 6 தொடக்கம் அதற்கு மேற்பட்ட மாலைநேர வகுப்புக்களை பாடசாலை நாட்களில் மாலை 4. 00 மணி தொடக்கம் 6. 30 மணிவரை நடாத்துமாறும் ஆண்டு 5-ம் அதற்கு உட்பட்ட வகுப்புக்களையும் 94-ம் ஆண்டு உயர்தர வகுப்புக்களையும் வழமைபோல் மாலை 3. 00 மணி தொடக்கம் 6 30 மணிவரையும் நடாத்துமாறும் யாழ் மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் கேட்டுள்ளது.

**ஆசிரியர் சேவைக்கால பயிற்சி;**

## கலந்து கொள்ளாதவரிடம் விளக்கம் கோரப்படுகின்றது

[நல்லூர்)
ஏப்ரல் 1994 ஆசிரியர் சேவைக்காலப் பயிற்சி விடுமுறைக் காலத்துச் செயலமர்வுகளில் கலந்து கொள்ளாத ஆசிரியர்களிடமிருந்து விளக்கக் கடிதம் வலயம் ஒன்று கல்விப்பணிப்பாளரால் கோரப்பட்டுள்ளது நேற்று முன்தினம் நடைபெற்ற நல்லூர்க் கோட்ட அதிபர்கள் கூட்டத்தில், இந்தச் சுற்று நிருபத்தை மீளப் பெறும்படி அதிபர்கள் பணிப்பாளரைக் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
தவணை விடுமுறைக்காலத்தில் சனிக்கிழமை அதிபர்களுக்கு அறிவித்து, சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைத் திங்கட்கிழமை செயலமர்வில் பங்குபற்றும்படி கேட்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்று அதிபர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. சிலதானக் குறிப்பு இடம் பெறுவதை உறுதி செய்து கொள்ளுமாறும், விளக்கக் கடிதங்களை ஆசிரியர் சுயவிபரக் கோப்பில் இடும் படியும் கல்வி அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளார்கள் அதேவேளை, இவ்வகை ஆசிரியர் தொடர்பாக நல்லூர் - யாழ்ப்பாணபிரதிக் கல்விப்பணிப்பாளர் எடுத்த நடவடிக்கையை இம் மாதம் 16ஆம் திகதிக்கு முன் அறியத்தரும் படியும் வலயம் ஒன்று கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

வலயம் ஒன்று பணிப்பாளரின் இந்தச் சுற்று நிருபத்தை அதிபர்கள் ஆட்சேபித்ததைத் தொடர்ந்து சுற்று நிருபத்தில் சில மாற்றங்கள் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சு. க. மேதின ஊர்வலத்தில் சந்திரிகா படங்களே அதிகம்

வடக்கு -கிழக்கு யுத்தத்தை நிறுத்து'' ''பல்கலைக் கழக மாணவர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்'' ''படித்தவர் வெளியே, படிக்காதவர் ஆட்சியில் இவ்வாறு பல்வேறு கோசங்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மேதின ஊர்வலத்தில் முன்வைக்கப்பட்டன''

இவ் ஊர்வலத்தில் சென்ற ஊர்திகளில் சிறிமாவோ பண்டார நாயக்காவின் உருவப் படங்களைவிட சந்திரிகா குமாரணதுங்காவின் உருவப் படங்களே அதிகமாகக் காணப்பட்டன

## வினா விடை போட்டி

(கொழும்புத்துறை)
சரவெட்டி கல்விக் கோட்டத்துக்கான கணித விஞ்ஞான வினா விடைப் போட்டி இன்று கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இப் போட்டி ஆண்டு ஆறு தொடக்கம் ஆண்டு பதினொன்றுவரையிலான மாணவர்களிடையே நடாத்தப்படும்.
(24)

## 300 தபால் பொதிகள் கோமாரியில் வந்தன

(யாழ்ப்பாணம்)
கொழும்பில் இருந்து அத்தியாவசிய உணவு மற்றும் ... களை இறக்கும் என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

மேலும் உள்ளூர் மற்றும் ...

## ஏ. எஸ். எல். வி கோள் இன்றுசெலுத்தப்படும்

(சென்னை)
ஏ- எஸ்-எல்- வி- செயற்கை கோள் செலுத்தும் ஏவுகணை இன்று காலை விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டிருந்தது. இதற்கான ஆயத் ...

(திருவம்மான்)

**கரம்பொன், ஊர்காவற்றுறை**

தாயின் மடியில் : 1969 - 10 - 22

தாயக விடிவில் 1994 - 03 - ..1

அந்நிய ஆதிக்க வேரினை அழிக்க
ஆகினை
புலியாக நின்று களத்தில்
ஏகினை
மாற்றான் காலடியில் பூநகரி மழுங்குவதை
எண்ணினை
எண்மராய் கூடியே வேவு பார்க்கப்
புகுந்தனை
வியூகம் உடைத்து உட்புகுந்த அபிமன்யூ
போலாகினை
தாயகக் கரைகளில் செங்குருதி நுரை
அலைகள்
உன் வீரத்தின் புகழ் பாடின.

இவருடன் வீரச்சாவைத் தழுவிய

- கப்டன் கரிகாலன்
- கப்டன் கந்தையா
- கப்டன் அழகநம்பி - விஸ்ணு
- கப்டன் அன்புச்செல்வன் -ரகு
- லெப். துரையப்பன்
- லெப். வண்ணன்
- 2ஆம் லெப். கேது

ஆகியோரையு ம் இந்நாளில் நெஞ்சில் நினைவு கொள்கின்றோம்.

இன்று நண்பகல் நிகழவிருக்கும் திருவுருவப் படத் திரை நீக்கம், அஞ்சலியுரை ஆகியவற்றில் கலந்து கொள்வதுடன் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு [illegible]ராளிகள், நண்பர்கள், உறவினர்கள், அனைவரையும் வேண்டுகின்றோம்.

**திரு. சண்முகராசா (தந்தை)**
**(திருவம்மான்)**
**ச. மோகனராஜ் (சகோதரர்)**
மற்றும் குடும்பத்தினர்

63, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம். (8191)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1994ஆம் ஆண்டு மே மாதம் 04ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பற்றும்படி கேட்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்று அதிபர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. சில கற்கை நெறிகளுக்கான செயலமர்வுகள் நடைபெறவில்லை என்றும், சில விடுமுறைக் காலத்துச் செயலமர்வுகளுக்கு உரிய காலத்தில் ஆசிரியர்களுக்கான அறிவித்தல் விடப்படவில்லை என்றும் அதிபர் வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர்.

ஆசிரியர் விளக்கக் கடிதங்களுடன் அதிபர்களின் அவ

## விடுதலை புலி

''மலரும் உறவும் - பிறக்கும் அச்சமும்'' என்ற கருத்து நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ''சமாதானம் ஏன் பிறக்க வில்லை?'' ''பெரும் படைக்கலக் கொள்வனவுகளுடன், போருக்குச் செய்யப்படும் ஏற்பாடுகள்'' ''ஆழப் புதைக்கப்பட்டவை மீளத் தோண்டப் படுகின்றன'' ''ஜெயலலிதா அரசின் தீவிர ஈழத் தமிழர் எதிர்ப்புணர்வு'' வெளிநாடு சென்ற தமிழர்களைத் திருப்பி அனுப்பும்முயற்சிகள்'' என்ற கருத்துரைகளை இவ் இதழ் தாங்கியுள்ளது.

அத்துடன் லெப்டினன்ட் கேணல் நவநீதன் என்ற போராளியின் குருதிச் சுவடுகளும், ''போராடும் பூமி; புலிகளின் காலம்; பிரபாகரன் வழிகாட்டி'' என்ற கவியுரையும், ' நின்று நிலைக்கப் போகும் இரண்டு கலை வடிவங்கள்'' என்ற மதிப்பாய்வும், ''கறுப்பு மலரே! நாங்கள் என்ன செய்ய?'' என்ற படக் கவிதையும், ''வேண்டுவது ஒன்று'' என்ற உருவகமும் மேலும் பல அம்சங்களும் இவ் இதழில் இடம்பெற்றுள்ளன.

## [illegible]தின

காப்புறுதி, ஓய்வூதியம், விவசாயிகளுக்கு கடன் வழங்க வங்கி அமைத்தல் என்பன ஜனாதிபதி குறிப்பிட்ட திட்டங்களில் சிலவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

லாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## விமானத்தாக்குதல்

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படை விமானங்கள் வவுனியா மாவட்டம், ஓமந்தைக்கு அருகே தாக்குதல்களை நடத்தியுள்ளன. நேற்று இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன.

## ஐ. தே. க

உறுதி அளிக்கப்பட்டதாகவும் ஆனால் ஜனாதிபதி இது குறித்து ஒன்றும் தெரிவிக்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை அமைச்சர்களான பெஸ்ரஸ் பெரேரா, ஹரல்ட்ஹேரத் ஆகியோருக்கும் கட்சித் தலைமைப் பீடத்துக்கும் இடையே கருத்து வேற்றுமை விரிவடைந்து வருவதாகவும் இவர்கள் எவ்வேளையிலும் கட்சியைவிட்டு வெளியேற்றப்படலாம் அல்லது இராஜினாமாச் செய்யுமாறு வற்புறுத்தப்படலாம் என தெரிய வருகின்றது.

## பயிலுநர்

படிவத்தில் விண்ணப்பிக்லாம். இதற்கென இடமாற்றச்சபை மூலம் இவர்களுக்கு இடமாற்றம் வழங்க நடவடிக்கை எடுக்கலாம்.

இவர்களது சம்பள அளவுத்திட்டம் 24120 — 14×660— 6×780—38040/ எனவும் ரூபா 25440/- 30720/ ஆகிய சம்பளங்களை அடையும்போது வினைத் திறமை காண்தடையில் சித்தியடையவேண்டும்.

மேலும் இவ்வாறு நிரந்தர நியமனம் வழங்கிய பின்னர் இவ் ஆசிரியர்களின் கல்விச் சான்றிதழ்கள் உரிய அதிகாரியினால் உறுதிப் படுத்தப்பட வேண்டும் எனவும் இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (17)

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து அத்தியாவசிய உணவு மற்றும் பொருள்களுடன் காங்கேசன் துறைவந்தடைந்த 'கோமாரி' கப்பலில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன,

இக்கப்பல்இன்றுகாங்கேசன் துறை துறைமுகத்தில்தரித்து நிற்கக்கூடிய சூழ்நிலை அதிகமாக உள்ளமையால் நாளை காலையே இக் கப்பல் பருத்தித்துறை வந்து தபால்பொதி

## விமானங்கள் நோட்டம்

நேற்றுக்காலையிலும் நேற்று முன்தினம் மாலையிலும் யாழ்ப்பாணக் கடற்கரையோரங்களை சீபிளேன், அவ்ரோ ஆகியவை சுற்றிநோட்டமிட்டன அத்துடன் நேற்று முன்தினம் இரவு மண்டைதீவு இராணுவம் குருநகர் கடற்கரையோரங்களை நோக்கி கலிபர் தாக்குதல்களையும் மேற்கொண்டது நேற்றுக் காலையில் சிறிலங்காவின் ஹெலியும் சுற்றி நோட்டமிட்டுச் சென்றது

## குருபூசை

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் இன்று திருநாவுக்கரசு நாயனார் குருபூஜை கொண்டாடப்படவுள்ளது.

இப்பாடசாலைபின்பழைய மாணவரும் ஓவியக் கலைஞருமான திரு த யோகநாதன் அவர்களால் வரையப்பட்டு அன்பளிப்பாக வழங்கப்பட்ட 5 அடி உயரமான திருநாவுக்கரசரின் படம் கிராமத்தைச் சுற்றி ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு பாடசாலை மண்டபத்தில் வைக்கப்பட்டு பூஜைகள் ஆராதனைகள் செய்யப்படவுள்ளன.

இந்து மாமன்றத் தலைவர் செல்வன் சி நிர்மலேஸ்வரன் தலைமையில் சொற்பொழிவுகளும் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளன.

களை இறக்கும் என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

மேலும் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளுக்கான தபால்களைச் சேர்ப்போர் நாளை காலை 8-30 இற்கு முன்னதாக யாழ். பிரதான தபால் கந்தோர் தபால் பெட்டியில் சேர்க்குமாறு யாழ். தபாலக அதிபர் தெரிவித்தார்.

அத்துடன் இத்தபால் பொதிகள் ''பிளான் பாயல்'' கப்பலில் நாளை எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (பா,நி)

கோள் செலுத்தும் ஏவுகணை இன்று காலை விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டிருந்தது. இதற்கான ஆயத்தங்கள் நேற்றிரவுடன் முடிவடைந்தன.

**யாழ். ஸ்ரீதரில்...**
தினசரி மாலை 4, 6 மணி
சனி,ஞாயிறு காலை 10.30
மாலை 4, 6 மணி
**காற்றுவெளி**
சனி,ஞாயிறு 2.30மணிக்கு
**ஒளிவீச்சு**
(சி-9290)

## அறிவித்தல்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் திருவிழாக் காலத்தில் கடைகள் நடத்துபவர்களுக்கு 6-5-94 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய முன்றலில் இடங்கள் வழங்கப்படும்.

- நிர்வாகம்

(சி-9343)

## மரண அறிவித்தல்

### வேலு சண்முகவேல் (சண்முகம்)

(உரிமையாளர் சாந்தி கபே, கன்னாதிட்டி சந்தி)

நுவரெலியாவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கில்னர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலு சண்முகவேல் நேற்றுக் காலமானார். இவர் அமராவதியின் அன்புக் கணவரும், இந்திராகாந்தி, சுபா, சதீஸ்குமார், ஸ்ரீபிரியா, கோகிலா. ஆகியோரின் அன்புத் தந்தையும், சோமசுந்தரம், பழனியாண்டி (பன்னீர்), கிருஷ்ணமூர்த்தி (மூர்த்தி), சரஸ்வதி, ராஜேஸ்வரி, ஆகியோரின் அன்புச் சகோதரனும், முத்துசாமி, ஸ்ரீயின் அன்பு மைத்துனரும், சரவணபவான், சுமதி, தேன்மொழி, சுரேஷ், கார்த்திக் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பி. ப. 4 மணிக்கு இவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும், உற்றார். உறவினர், நண்பர்கள் தயவு செய்து இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
R. முத்துசாமி
(மைத்துனர்)

185/1, கில்னர் ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (8193)